விலை : 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 14 சனிக்கிழமை (30.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 346

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரசியலமைப்பு திருத்தத்திலிருந்து விலகிக் கொள்கிறது இந்தியா?

## இந்.வெளிவிவகார அமைச்சு இரகசிய அறிக்கை

(கொழும்பு)

**மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கும் 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச்சட்டம் தொடர்பில் இலங்கையுடன் இந்தியா நடத்தும் பேச்சுக்கள் முறிவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இந்திய அரச வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

13-வது திருத்தத்தின் அதிகாரங்களை விரிவுபடுத்துவது தொடர்பில் இலங்கை அரசுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள முறிவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு, அந்நாட்டு பிரதமரின் அலுவலகத்திற்கு வழங்கியுள்ள இரகசியமான அறிக்கையில் கூறியுள்ளதாக தெரிய வருகிறது.

இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட அரசியல் ஆலோசகர்களின் தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையில், கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் இந்தியா எடுத்த இராஜதந்திர தீர்மானங்கள் பற்றி கடுமையான கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இந்தியாவினால் விடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை இலங்கை நிறைவேற்றியுள்ளது.

எனினும் இந்தியா, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக வாக்களித்தமை, பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்கேற்காமை போன்ற நடவடிக்கைகள் இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளில் சரிவை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 13-வது திருத்தச் சட்டம் தொடர்பில் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் ஆபத்தான நிலைக்கு சென்றுள்ளன.

இந்த காரணங்களின் அடிப்படையில் இலங்கை மேலும் சீனா மற்றும் பாகிஸ்தானை நோக்கி நெருங்கி செல்வதை தடுக்க முடியாது என்றும அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 13-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள 20-ம் பக்கம் பார்க்க

## இரண்டாவது வாசிப்பு 99 வாக்குகளால் நிறைவேற்றம்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தின் பின்னர் நேற்று நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 99 மேலதிக வாக்குகளால் திட்டம் 20-ம் பக்கம் பார்க்க

## மாநகர சபையில் கூச்சல் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டத்தின் போது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கிடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றிருந்ததோடு அநாகரிகமான வார்த்தைப்பிரயோகங்களும் இடம் 20-ம் பக்கம் பார்க்க

## சிறிதரன் எம்.பியின் தைரியத்தை பாராட்டுகிறது பொது பல சேனா

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் தைரியம் பாராட்டுக்குரியது என பொது பல சேனா அமைப்பு புகழாரம் சூட்டியுள்ளது.

பாராளுமன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை போற்றியும் மாவீரர் தினத்தை பற்றியும் பேசிய சிறிதரனின் தைரியம் பாராட்டுக் குரியது என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனை ஓர் சுதந்திரப் போராட்ட வீரராகவும் தமிழ் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவராகவும் சிறிதரன் தனது பாராளுமன்ற உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறெனினும், தேசிய சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவரான மொனரவில கெப்பிட்டிபொலவை எந்தவொரு சிங்கள பாராளுமன்ற உறுப்பினரும் நினைவு கூர்ந்து பேசவில்லை என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை மிகவும் வெட்கப்பட வேண்டிய ஓர் நிலைமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கெப்பிட்டிபொல நிலமேயின் சிரார்த்த தினமன்று ஒரு சிங்கள பாராளு 20-ம் பக்கம் பார்க்க

## எல்லாளனின் யுத்தம் குறித்தும் கமரூன் விசாரிக்க வேண்டும்

### அமைச்சர் குமார தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற போர சம்பந்தமாக விசாரணை நடத்த வேண்டுமாயின் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் முதலில் எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

பதுரெலிய பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடைபெற்ற போர உரிய முறையில் முன்னெடுக்கப் படவில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 20-ம் பக்கம் பார்க்க

## சகல தொழில்களும் இராணுவத்திடம் தமிழ் இளைஞர்கள் என்ன செய்ய முடியும்!

### வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

(விசுவமடு)

எமது வீடுகளையும் காணிகளையும் இராணுவம் எடுத்துள்ளது. கடற்றொழிலை கடற்படையினர் செய்கின்றனர். நிலங்களை இராணுவம் எடுத்துப் பயிரிடுகிறது. உணவக வியாபாரங்களும் இராணுவத்தின் வசம் காணப்படுகின்றன.

இந்த நிலையில் வேலைவாய்ப்பின்றியே தமிழ், இளைஞர் யுவதிகளும் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்படுகின்றனர் என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். விசுவமடு விவசாயிகள் பல நோக்கு கூட்டுறவுச் சங்க நவீன



அரிசி ஆலைதிறப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர்மேலும் கூறுகையில், இன்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஆணையரின் சிறப்புப் பிரதிநிதியும் அனைத்துலக தொழிலாளர் அமைய இலங்கைக்கான பணிப்பாளரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருப்பது 20-ம் பக்கம் பார்க்க

## நல்லிணக்க செயற்பாடுகளை கூட்டமைப்பு குழப்புகிறது

### குற்றம்சாட்டுகிறார் கோத்தபாய



(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க முனைப்புக்களை சீர்குலைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட அடிப்படையில் நல்லிணக்க முனைப்புக்களை கூட்டமைப்பு புறக்கணித்து வருவதாகத் தெரிவித் 20-ம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# இந்து ஆலயங்கள் இடித்தழிப்பு இந்து மாமன்றம் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பலாலி உயர்பாதுகாப்பு வலயங்களிலுள்ள ஆலயங்கள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருவதை வன்மையாக கண்டித்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றம் இந்நடவடிக்கை இந்து மக்களின் உணர்வை புண்படுத்தும் செயல் எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

குறித்த பாதுகாப்பு வலயத்தினுள் இடம்பெறும் இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளை பார்வையிடச் சென்ற வடமாகாண முதலமைச்சரை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தியமையும் கண்டனத்துக்குரியது எனவும் இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த இரு நாட்களாக காங்கேசன்துறை, பலாலி பாதுகாப்பு வலயத்தில் இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டதையிட்டு இந்துமக்கள் எல்லோரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

பாதுகாப்பு வலயத்தில் என்ன நடக்கிறது என்பது இருட்டடிப்பு செய்யப்படுகின்றது. இந் நிலையில் மாகாணத்தின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குறித்த பிரதேசத்திற்கு சென்று உண்மையை அறிய முற்பட்டபோது அவரை பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்தியதற்கு இந்து மக்கள் சார்பில் வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம்.

இதேவேளை அங்கு சென்ற அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனும் படையினரால் தடுத்து நிறத்தப்பட்டமையும் கண்டனத்துக்குரிய விடயமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)


## விற்பனைக்கு

நம்பர் 1 நியூபேனார்ட் (New Bernards), கிறீன் வலி (Green Valli), ஊர்க்கோழிக் குஞ்சு ஆகிய கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்று கொள்ளலாம். (சி-5604)

தொடர்புகளுக்கு:- செல்வரெட்ணம்
0778448295, 0776176370

## விற்பனைக்கு

சீமைக்கிளுவை கதியால் மொத்தமாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0778695354
(4616)


## கோப்பாயில் திருட்டு சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். கோப்பாய் மத்தியில் அமைந்துள்ள வீடொன்றிலிருந்து பணமும் தங்கநகைகளும் நேற்று அதிகாலை திருட்டுப் போயுள்ளது. இவ்வீட்டிலிருந்து 50 ஆயிரம் ரூபா பணமும் 3 பவுண் நிறையுடைய தங்க நகையுமே திருட்டுப் போயுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக உரிமையாளர் நேற்று வெள்ளிக்கிழமை காலை எழுந்து பார்த்தபோது வீட்டிலிருந்த பணமும் தங்க நகையும் திருட்டுப் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில்வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வந்த நிலையில் நேற்று மதியம் மேற்படிச் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். என பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)


## பதவி வெற்றிடம்

● கணனி தட்டச்சு (தமிழ்) ● பக்க வடிவமைப்

ஆகியவற்றில் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள் (ஆண்கள்

இரவுக் கடமைக்குரிய இப்பதவி வெற்றிடத்திற்கு நேர்முகத் தேர்வு, செயன்முறைப் பரீட்சை ஆகியவற்றின் மூல ஆட்சேர்ப்பு செய்யப்படும். முன்னனுபவமும் தகைமையு யாழ் நகர மையத்திற்கு அண்மித்த தூரத்தை நிரந்த வசிப்பிடமாக கொண்டவர்களும் 02.12.2013 (திங்க கிழமை) அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்,
**வலம்புரி**
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்
• பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே • மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829
(சி-5599)


## கேள்வி மனுக்கோரல்

**சிற்றுண்டிச்சாலை / துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம்**

- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தினையும் 2014ஆம் ஆண்டு நடத்துவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
- மீளளிப்புச் செய்யப்படாத ரூபா. 1000/- (ஆயிரம்) கேள்விக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 01-12-2013 முதல் விண்ணப்பப் படிவங்களை ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையில் நோயாளர் நலன்புரிச் சங்க பொருளாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- டிசம்பர் மாதம் 15ஆம் திகதி (15-12-2013) பகல் 12.00 மணிவரை முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாக காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினமே மாலை 3.30 மணிக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும். அவ் வேளையில் கேள்வி மனுதாரர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

தலைவர்.
மந்திகை நோயாளர் நலன்புரிச் சங்கம்.

ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை.

(C-5602)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபோது...

### திருவாளர் தணிகாசலம் ஜெயரூபன்



அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் கௌரவிக்கப்பட்டு சாமஸ்ரீ தேசமானிய தேசிய விருதினை கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் கௌரவ அல்-ஹாஜ் நஜீப் ஏ. மஜீத் அவர்கள் வழங்கிய போது..

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் வசிப்பவரும் நெல்லியடி பிரதேசத்தில் கணக்காய்வு நிறுவனத்தை நடத்திவரும் கணக்காய்வாளரும் வருமானவரி ஆலோசகருமான திருவாளர் **தணிகாசலம் ஜெயரூபன்** அவர்கள் **சமாதான நீதவான் பட்டம் மற்றும் சாமஸ்ரீ தேசமானிய தேசிய விருதினைப் பெற்றுக் கொண்டமைக்காக** அவரை உளமார வாழ்த்தி அவர் மேன்மேலும் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்று நலமுடன் வாழ வல்லிபுரமாயவனின் அருள் வேண்டி **வாழ்த்துகின்றோம்.**

வாழ்த்துவோர் :
திரு. ஐ. விக்கினேஸ்வரன் குடும்பம்
சித்திவிநாயகர் வீதி,
கொற்றாவத்தை.

(C-5603)



## பாராட்டும் விருது வழங்கலும்

கிளிநொச்சி வவுனியா மாவட்ட மேல் நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிசும், சமாதான நீதவானும், கிளிநொச்சி, பூநகரி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரியும், கிளிநொச்சி மாவட்ட லயன் கழக உறுப்பினரும், பத்தினியார்காட்டு சித்தி விநாயகர் ஆலயச்செயலாளரும், சமூக சேவையாளருமான

### திரு. தாமோதரம்பிள்ளை அரியரத்தினம்

அவர்களது தன்னலமற்ற சேவையை கௌரவிக்கும் அசில இன நல்லுறவு ஒன்றியம் **சாமஸ்ரீதேசமானிய** என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது. இவ் விருது வழங்கம் விழா 2013.11.23ஆம் திகதி திருகோணமலை சென்மேரிஸ் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ அல்-ஹாஜ்-நஜீப்-ஏ-மஜீத் அவர்களால் சான்றிதழ் வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவர் மேன்மேலும் கௌரவங்களைப் பெற்று நீண்ட காலம் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து மனமுகந்து வாழ்த்துகின்றோம்.

தம்பிப்பிள்ளை தியாகராசா JP
(சமாதான நீதவானம் திடீர் மரண விசாரணை அதிகாரியும், கண்டாவளை பிரதேசம், பரந்தன்.)

குடும்பத்தினர்
புளியம்பொக்கணை.

(C-5601)

# இன்று ஒரு தகவல்

## அந்த எட்டுப்பேர்

ஒரு பள்ளிக்கூடத்தில் வசதியான வீட்டுப்பிள்ளையும் ஏழைப் பையனும் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இவர்களிருவரின் வீடுகளும் ஒரே தெருவில் தான் இருந்தன. பணக்கார வீட்டுப்பையன் பங்களாவில் இருந்தான்.

அவனுக்கு வேலைசெய்வதற்காக சில வேலையாட்கள் உண்டு. அதனால் அவன் நன்றாக சாப்பிடுவான். தூங்குவான். ஏதோ வரவேண்டுமே என்பதற்காக பள்ளிக் கூடத்துக்கு வருவான் போவான் அவ்வளவுதான். இந்த ஏழைப்பையன் அப்படியில்லை. காலையில் எழுந்து உடற்பயிற்சிசெய்வான். அவர்களுடையவீட்டில்கிடைக்கும்சாதாரணஉணவை அளவோடு உண்பான். வீட்டிலுள்ள வேலைகளையும் செய்வான்.

பள்ளிக்குத் தவறாமல் வந்துவிடுவான்.

அவனுக்கு கூடப்பிறந்த சகோதரிகள் எட்டுப் பேர் உள்ளனர்.

எல்லோரும் தன்னம்பிக்கையுடன் அவரவர் வேலைகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இந்தப்பையன் எப்பொழுதும் உண்மையைத்தான் பேசுவேன்.

கடமையை ஒழுங்காகச் செய்வான்.

ஆசிரியர்களுக்கு இவனை நன்றாகப் பிடிக்கும். அதனால் இவனை அந்தப் பள்ளிக்கூடத்து மாணவத்தலைவனாக நியமித்திருந்தனர்.

இது அந்த பெரிய இடத்துப்பையனுக்குப் பிடிக்கவில்லை.

மாணவத்தலைவனுக்குப் பணிந்து போகவும் அவனுக்கு விருப்பமில்லை.

ஒருநாள் வகுப்பில் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரு வேலை கொடுத்தார்.

எல்லோரும் அதை சுறுசுறுப்பாக செய்து கொண்டிருந்தனர். இவன் மட்டும் சோம்பலாக உட்கார்ந்திருந்தான்.

ஆசிரியர் அந்தப் பக்கமாக வந்தார். இதைப்பார்த்து விட்டார். உடனே மாணவத்தலைவனாக இருக்கும் அந்த ஏழைப்பையனைக் கூப்பிட்டார்.

"அந்தப்பையன் ஏன் இப்படி சும்மா உட்கார்ந்திருக்கின்றான்? என்னவென்று விசாரித்துச் சொல்" என்று சொல்லிவிட்டு உள்ளே போனார். இவன் மெதுவாகப்போய் அவனிடம் விசாரித்தான். "ஏன் இப்படி சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

அவன் அலட்சியமாக இவனைப் பார்த்தான்.

"என்னுடைய சிரமம் உனக்கெங்கே தெரியப் போகிறது? வீட்டில் என்னுடைய சௌகரியங்களைக் கவனிக்கும் வேலையாட்கள் இரண்டுபேரும் இன்றைக்கு வேலைக்கு வரவில்லை.

அதனால் என்னுடைய வேலைகளையெல்லாம் நானே கவனிக்கவேண்டியதாயிற்று. அதனால் சோர்ந்து போய்விட்டேன்" என்றான்.

அதன்பின் கேட்டான்:

"அதுசரி உன்னுடைய வீட்டிலுள்ள வேலைக்காரர்கள் வராதபோது நீ எப்படிச் சமாளிக்கிறாய்?" என்று கிண்டலாகக் கேட்டான்.

இவன் ஏழை என்பதையும் இவனுடைய வீட்டில் வேலை செய்வதற்கு யாருமில்லை என்பதையும் இப்படிச் சொல்லி கிண்டல் செய்தான். இது இந்த ஏழைப்பையனுக்கும் புரிந்தது. மனம் வேதனைப்பட்டது. இருந்தாலும் வெளியில் எதுவும் காட்டிக்கொள்ளாமல் சிரித்துக் கொண்டே, "எனக்கு அந்தக் கவலையே கிடையாது. நான் நினைத்தவுடன் எனக்கு உதவி செய்ய எட்டுப்பேர் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள்" என்றான்.

இவன் இப்படிச் சொன்னதும் அவனுக்கு ஒரு மாதிரியாகி விட்டது. தலையைக் குனிந்து கொண்டு போய்விட்டான். உள்ளே உட்கார்ந்திருந்த ஆசிரியரின் காதில் இது விழுந்தது.உடனே அந்த ஏழைப்பையனை உள்ளே கூப்பிட்டார். போனான். இவன் பொய் சொல்லமாட்டான் என்று அவருக்குத் தெரியும். அவனை சமாளிப்பதற்கு இவன் இப்படியொரு பொய் சொல்லியிருப்பான் என்பதையும் அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"என்னப்பா... நீ நினைக்கும் காரியத்தை செய்ய 8 பேர் தயாராக இருப்பதாக சொன்னாயே உன்னுடைய சகோதர, சகோதரிகளை சொன்னாயா?" என்று கேட்டார்.

"இல்லை ஐயா, நான் அவர்களைக் குறிப்பிட்டு அப்படிச் சொல்லவில்லை" என்றான்.

"அப்படியானால் பொய் சொன்னாயா?" என்று கேட்டார். "ஐயா நான் பொய்யும் சொல்லவில்லை" என்றான். "அப்படியானால் நீ சொன்னதற்கு என்ன அர்த்தம்" என்றார்.

அதற்கு அந்தப்பையன் சொன்னான்:

"ஐயா நான் நினைப்பதை செய்து முடிக்க என்னிடமுள்ள அந்த எட்டுப்பேர் யார் எனில் இரண்டுகால்கள், இரண்டுகைகள், வாய், மூக்கு, கண், காது இவர்கள்தான் அந்த வேலையாட்கள்.

நான் சொல்வதை கேட்க அவர்கள் எப்பொழுதும் தயார். அந்த அளவுக்கு என்னுடைய பயிற்சிகள், பழக்கவழக்கங்கள் மூலமாக அவர்களை நல்ல நிலைமையில் வைத்திருக்கிறேன்" என்றான்.

இந்தக்கதையை சுவாமி சின்மயானந்தா் சொல்லுவது வழக்கம்.

இயற்கை நமக்கு கொடுத்திருக்கும் வேலையாட்கள் தான் இந்த எட்டுப்பேரும்.

இவைகளை நல்ல முறையில் வைத்திருந்து வேலைவாங்க வேண்டியது நமது கடமை. அந்தக்கடமையை ஒழுங்காக செய்து கொண்டு வந்தால் வாழ்க்கையில் வெற்றி நிச்சயம். இல்லையெனில் குழப்பம் தான்.

புத்திசாலியாக இல்லையெனில் இந்த வேலையாட்கள் நாம் சொல்வதை கேட்கமாட்டார்கள். ஒருத்தன் மதுபோதையில் தள்ளாடித்தள்ளாடிப்போய் ஒரு மரத்தில் முட்டிக் கொண்டான். தலையில் கட்டுப் போட்டுக் கொண்டு மறுநாள் வந்தான். "ஏன்டா இப்படி செய்திறாய்" என்று கேட்டார்கள்.

"நான் ஒதுங்கிப்போ என்று தான் சொன்னேன் அது கேட்கவில்லை" என்றான்.

"எது கேட்கவில்லை? உன்னுடைய கால்" என்று கேட்டார்கள்.

"இல்லை... அந்த மரம்" என்றான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளரை தெரிவுசெய்து பரிசு வழங்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலிருந்தும் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளரைத் தெரிவு செய்து பரிசுவழங்கும் திட்டம், வட மாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் அறிவுறுத்தலுக்கு அமைய அமுலாக்கப்பட்டுள்ளது.

இவ்வீட்டுத்தோட்டப் போட்டியானது முதலில் மாவட்ட ரீதியாக விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்பட்டு அதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியான போட்டிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர். இதில் முதலாம் இடத்தைப் பெறும் போட்டியாளர்களிடையே மாவட்ட மட்ட மதிப்பீடு நடைபெற்று இறுதியாக மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவ்வாறு மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி சகல வீட்டுத் தோட்ட செய்கையாளர்களும் இப்போட்டியில் பங்கு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப்போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டி விதிமுறைகள் பற்றிய முழுமையான விபரங்களை பார்வையிட்டு போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு பூர்த்தி செய்யப் பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் விவசாயப் போதனாசிரியருக்கு கிடைக்கத்தக்க வகையில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளருக்கான போட்டி - 2013 என குறிப்பிடப்படல் வேண்டும்.

இதேவேளை வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் உழவர் விழாவில் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

# விவசாய அபிவிருத்தியில் பங்கேற்க புலமையாளர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை வளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறும் பொருட்டு சிந்தனைக்குழாம் ஒன்றையும் ஆலோசனைச்சபை ஒன்றையும் அமைக்க இருப்பதாக வடக்கு மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

இது தொர்பாக அவர் வெளியிட்டிருக்கும் ஊடகக்குறிப்பில்,

விவசாயம், கமநலசேவைகள், கால்நடைவளர்ப்பு, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் ஆகிய துறைகளை நவீன முறையில் மேம்படுத்தி இத்துறைகளில் வடமாகாணத்தைத் தன்னிறைவு அடையச் செய்வதற்கு அறிஞர்களின் பங்களிப்பு அவசியமாகும். அந்த வகையில் எமது அமைச்சுக்குத் தேவையான நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெறும் பொருட்டு தாயகம், தமிழகம் மற்றும் புகலிட நாடுகளில் வாழும் துறைசார் அறிஞர்களை உள்ளடக்கிய சிந்தனைக்குழாம் (THINK TANK) ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்குழாமில் இடம்பெறுபவர்கள் இணையவழித் தொடர்பாடலின் ஊடாக தமது ஆலோசனைகளை எமக்கு வழங்க முடியும்.

அத்தோடு நாம் காலத்துக்குக் காலம் நேரில் கூடிக் கலந்தாலோசிக்கும் நோக்கில் ஆலோசனைச்சபை ஒன்றையும் அமைக்க உள்ளோம்.

மேற்படி சிந்தனைக்குழாமிலும் ஆலோசனைச்சபையிலும் இடம்பெற்று தமது மேலான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்க விரும்பும் பற்றாளர்கள் அனைவரையும் npminiagri@gmail.com என்னும் மின்னஞ்சலில் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 20 - 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 80 | 80 |
| தக்காளி | 20 | 40 | 50 | 70 |
| மரவள்ளிக் கிழங்கு | 20 | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 20 | 50 | 40 |
| கரட் | 40 | 40 | 65 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 | 50 |
| புடோல் | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 220 | 220 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 180 | 120 | 140 |
| பாகற்காய் | 60 | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 40 | 50 |
| பயற்றங்காய் | 30 | 80 | 30 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 80 | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 50 | 90 | 80 |
| போஞ்சி | 100 | 90 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 | 35 - 45 |

# இராசி பலன்

30.11.2013

(கார்த்திகை 14, சனிக்கிழமை )

சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு

துவாதசி முற்பகல் 10.55 மணிவரை

சித்திரை முற்பகல் 8.49 மணிவரை

இராகுகாலம் 9.14-10.44 மணிவரை

சுபநேரம் 3.14-4.44 மணிவரை

சனிப்பிரதோச விரதம்

**மேடம்** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், போசன சுகமுண்டு.

**இடபம்** தொழிலில் இருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உடல்நலம் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** நன்மைகள் நாடி வரும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலின் முன்னேற்றம் கருதி புதிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிங்கம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உடன் பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், செல்வாக்கான நாள், மனை சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு.

**கன்னி** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சேமிப்பு பழக்கம் அதிகரிக்கும், பெரியவர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன கிடைக்கலாம், தேகநலன் சீராகும்.

**துலாம்** உறவினர் நலன்கருதி சில அலைச்சல்கள் ஏற்படலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள், தேவையற்ற சில விவாதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், பெரிய மனதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றமான நாள்.

**மகரம்** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்,

**கும்பம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், தந்தை வழியில் தனவரவுகள் ஏற்படலாம்.

**மீனம்** வேலைச்சுமை கூடும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்களின் போது கவனம் தேவை, போசன சுகமுண்டு, தேகநலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

வளவன்

# யாழ்.இந்துவின் மாணவன் பிலிப்பைன்ஸ் பயணம்

(மானிப்பாய்)

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற International mathematics and science Olympiad (IMSO) போட்டி இன்று சனிக்கிழமை பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெறவுள்ளது.


இதில் பங்குற்றுவதற்கு இலங்கையிலிருந்து 10 மாணவர்களைக் கொண்ட குழு பிலிப்பைன்ஸ் நோக்கி பயணமாகியுள்ளது.

இக் குழுவில் யாழ். இந்துக் கல்லூரியின் மாணவன் நடேசமூர்த்தி சிவமைந்தனும் அடங்குகின்றார்.

இவருடன் இலங்கையில் இருந்து 9 மாணவர்கள் சர்வதேச ரீதியாக நடை பெறவுள்ள ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றவிருக்கிறார்கள்.

இப்போட்டி நிகழ்வில் இலங்கையில் இருந்து பங்குபற்றும் குழுவில் யாழ்.இந்துக் கல்லூரியையும் தமிழரையும் பிரதி நிதித்துவப்படுத்தும் மாணவனாக இவர் ஒருவரே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)




நன்றி: ஐலன்ட்

# மாகாண வீர, வீராங்கனைகளை வளர்த்தெடுக்க பணப் பரிசுகள்

## நடவடிக்கை எடுக்கப்படுகிறது-முதலமைச்சர்











(யாழ்ப்பாணம்)

தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எமது மாகாண வீர, வீராங்கனைகள் உள்நாட்டில் நடைபெறும் சர்வதேசப் போட்டியொன்றில் பங்கு பற்றியிருந்தால் அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பணப் பரிசில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

4ஆவது வர்ண இரவு 2013 நிகழ்வு கோப்பாய் கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண, தேசிய, சர்வதேச போட்டிகளில் எமது வீர, வீராங்கனைகள் பெற்றுக் கொண்ட சாதனைகளைக் கௌரவிக்கும் முகமாகவே இந்த வர்ண இரவு விருது வழங்கும் நிகழ்வு நடைபெறுகின்றது.

இன்றைய உலகில் விளையாட்டுத்துறையில் முன்னேற வேண்டுமானால் எமது வீர, வீராங்கனைகளுக்குப் போதிய பயிற்சிகள், போதிய அனுசரணைகள், உதவிகள் போன்றவை கிடைக்க வழி செய்ய வேண்டும். தேக பலம், மனோதிடம், விடாமுயற்சி ஆகியன விளையாட்டுத்துறையில் முன்னேற அத்தியாவசியம் என்று கூறும் அதே நேரத்தில் விளையாட்டுக்களில் பங்குபற்ற அதற்கான அனுசரணைகளைப் பெற்றுக் கொள்வதும் முக்கியமாகத் தேவைப்படுகின்றது.

எல்லாமே பணத்தைச் சார்ந்தே விருத்தியடைந்து வருகின்றன. எல்லா மாணவ, மாணவர்களுக்கும் அவ்வாறான பண வசதிகள் கிடைக்கமாட்டா. அதனைப் பெற பொது ஸ்தாபனங்களும் தனி மனிதர்களும் அரசாங்கமும் முன்வர வேண்டியுள்ளன, பயிற்சி நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டும், தகுதி பெற்றவர்கள் போதிய அனுசரணைகளைப் பெற வழி வகுக்க வேண்டும், சில நேரங்களில் தேசிய அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற ஆதரவாளர்கள் தேவைப்படுவார்கள்.

மொத்தத்தில் எமது மாணவ சமுதாயம் விளையாட்டுக்களில் போதிய சிரத்தை காட்டவும் பயிற்சிகள் பெறவும் வலுவான போட்டிகளில் பங்குபற்றவும் நாம் ஆவன செய்யவேண்டும்.

வட மாகாண சபை தமிழ் பேசும் மக்களின் சபை. எமது தமிழ் பேசும் இளம் சமுதாயத்தினரை விளையாட்டுக்களில் சிறந்து விளங்கச் செய்ய எம்மால் முடியுமானவற்றைச் செய்து தர நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இந்த வாய்ப்பை வழங்கவே இலங்கை தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி எமது மாகாண வீர, வீராங்கனைகள் உள்நாட்டில் நடைபெறும் சர்வதேசப் போட்டியொன்றில் பங்குபற்றியிருந்தால் அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும், தேசிய அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்கு வெளியே நடைபெறும் சர்வதேசப் போட்டியொன்றில் பங்குபற்றியிருப்பின் அவருக்கு 15 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் வெளிநாட்டில் நடைபெறும் சர்வதேச போட்டியொன்றில் அல்லது உள்நாட்டில் நடைபெறும் தேசிய சிரேஷ்ட/ கனிஷ்ட போட்டியில் பங்குபற்றி பதக்கம் பெற்றிருப்பின் அல்லது நிற விருது பெற்றிருப்பின் அவர்களுக்குத் தக்கவாறு பணப் பரிசில்கள் கொடுக்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனினும் விளையாட்டுக்களில் பங்குபற்றுவோர் ஒலிம்பியர்கள் கூறும் கூற்றை மனதிற்கு எடுக்கவேண்டும். பங்கு பற்றுதலே முக்கியம். வெல்வது அல்ல என்பார்கள் ஒலிம்பியர்கள். அதாவது எல்லோருமே வெற்றியை நோக்கியே தமது சகல வளங்களையும் பாவிப்பார்கள். என்றாலும் ஈற்றில் வெற்றி பெறவில்லையே என்ற தாழ்வு மனப்பான்மைக்குத் தம்மைத் தள்ளிச் செல்லக் கூடாது என்பதாலேயே பங்குபற்றுதலே முக்கியம் என்றார்கள். இங்கு ஒரு முக்கியமான ஆன்மீகக் கருத்து உள்ளடங்கி இருக்கின்றது. உலகத்தில் நாம் எதனையும் எம்மால் இயன்ற மட்டும் செய்ய முன்வர வேண்டும். வெற்றி , தோல்வியில் மனம் பேதலித்துவிடக் கூடாது என்கிறது பகவத் கீதை. இரண்டையும் ஒரே மனோநிலையுடன் வரவேற்பவனே ஆன்மீகபால்பட்ட ஒருவனாவான். என்றாலும் இன்று வெற்றி, தோல்விகளை தமக்குரியவாறு மாற்றவும் சிலர் விளைகின்றார்கள். அவ்வாறான நேரங்களில் அநீதியை எதிர்கொள்வதும் எமது கடமையாகும். ஆனால் பொதுவாக எம்மால் முடிந்தவரையில் போராடி பயனைஇறைவன்பால் ஆற்றுப்படுத்துவதே சிறந்த வழி என்று நான் கருதுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# காணாமற்போனோரின் உறவுகள் மந்தைகள் போல் செயற்பட்டனராம்

## பொலிஸ் அத்தியட்சகர் ஜெப்ரி கூறுகின்றார்

(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோரின் உறவினர்கள் மந்தைகள் போல் செயற்பட்டதனாலேயே பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை சந்திக்க பொலிஸார் அனுமதிக்கவில்லையென யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட் ஜெப்ரி தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் டேவிட் கமரூனின் கவனத்தினையீர்க்கும் முகமாக கடந்த 16 ஆம் திகதி காணாமற் போனோரின் உறவினர்களினால் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

இம் மக்களை ஏன் பிரதமரின் பக்கம் செல்வதற்கு அனுமதிக்கவில்லை என ஊடகவியலாளரால் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஒரு நாட்டின் பிரதமர் இங்கு வந்திருக்கும்போது அவருக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிட்டால் அரசாங்கத்திற்கே கெட்ட பெயர் ஏற்படும்.

ஏனைய இடங்களில் உள்ள மக்கள் நாகரிகமாக நடந்து கொண்டதனால் பிரதமர் சந்திப்பதற்கு நாம் அனும்தித்தோம். ஆனால் இவ் ஆர்ப்பாட்ட மக்கள் ஆடு, மாடுகள் போல் அங்குமிங்கும் ஓடித்திரிந்தமையால் நாம் பிரதமரை சந்திக்க அனுமதிக்கவில்லை.

ஏனைய இடங்களில் குறிப்பாக முதலமைச்சர் சந்திப்பு, முகாம் மக்களின் சந்திப்பு போன்ற சந்திப்புக்கள் ஒழுங்குபடுத்தப்பட்டதைப் போன்று காணாமற்போனோரின் உறவுகளின் சந்திப்பையும் ஏன் தமிழ் அரசியல் தலைவர்கள்ஒழுங்குசெய்யவில்லை? அவ்வாறு செய்திருந்தால் இந்தளவிற்கு பிரச்சினை இடம்பெற்றிருக்காது.

அவ்வாறாயின் அரசிற்கு ஆதரவாக நடைபெற்ற ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு பொலிஸார் அனுமதி வழங்கியது ஏன் என கேட்கப்பட்ட போது,

அவர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆகையால் அனுமதி வழங்கினோம். பின்னர் கலைந்து செல்லுமாறு கூறினோம். அங்கிருந்து சென்றுவிட்டனர் என கூறினார்.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த மக்கள் தமது உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி, கதறியழுத காட்சி அனைவரது நெஞ்சங்களையும் உருக்கியிருந்ததோடு சர்வதேச அளவிலும் முக்கியத்துவம் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (அ-4)

# கொழும்பு மாநாட்டில் இந்தியா பங்கேற்றிருக்க வேண்டும்

## பிரிட்டன் மீண்டும் கவலை

கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாமை கவலையளிப்பதாக பிரித்தா னியா மீண்டும் கவலை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவின் இந்தியாவுக்கான புதிய பிரதி உயர்ஸ்தானிகராக பொறுப்பேற்ற பாரட் ஜோசி நேற்று முன்தினம் இந்தியா வில் செய்தியாளர்கள் மத்தியில் உரை யாற்றிய போது தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இந்த மாநாட்டில் கலந்துக் கொள்ளக் கூடாது என்று பல்வேறு தரப்பில் இருந்தும் வலியுறுத்தப் பட்டது.

எனினும், அந்த அழுத்தங்களை பொரு ட்படுத்தாது, இம்மா நாட்டில் கலந்துக் கொள் வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த பிர தமர் தொடர்ந்து மனித உரி மைகள் குறித்த வலயுறுத்தல்களையும் மேற்கொள்ள முடிந்தது.

இவ்வாறான செயற்பாட்டை இந்திய பிரத மரால் செய்ய முடியாமல் போனமை வருத்தம ளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)



84 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் வைத்திய கலாநிதி T.கெங்காதரன் அவர்கட்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்

நம் மண்ணில் பல இடர்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து 60 ஆண்டுகள் கடந்தும் சிறந்த வைத்திய சேவையினை ஆற்றிவரும் எமது மதிப்புக்கும் அன்பிற்கும் உரிய வைத்திய கலாநிதி T. கெங்காதரன் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் தேக ஆரோக்கியத்துடன் மக்க ளுக்கு சேவையாற்ற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டி நிற்பதுடன் இன்றைய தினத்தில் பிறந்த நாள் நல் வாழ் த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Happy Birthday

(4613)



வாழ்த்துவோர்:- வண். மேற்கு வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் அனைத்து ஊழியர்களும்


பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829

(சி/5541)


## தரம் 5 க்கான புலமைப் பரிசில் பரீட்சை-2013

## குட்டிச் சாதனையாளர்களை வாழ்த்துகின்றோம்

யா/சிதம்பரக் கல்லூரி — யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை



வி.தனுஜா 165 புள்ளிகள் | இ.விதுஷன் 171 புள்ளிகள் | ம.சுகன்யா 169 புள்ளிகள் | வே.தனுஷா 166 புள்ளிகள்

தன் முயற்சி,ஆசான்களின் அறிவூட்டல் பெற்றோரின் ஊக்குவிப்பு ஆகிய முப்பரிமாணங்களின் வெளிப்பாடே உங்கள் வெற்றி.

உங்கள் வெற்றியில் அக்கறை கொண்டவர்களுடன் முதற்படியான இவ் வெற்றி முதுமாணி பட்டம் வரை தொடர வாழ்த்துகிறோம்

FAILURES ARE THE PILLERS OF SUCCES இதற்கமைய துணிவே துணை என இப்பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துக் குழந்தைச் செல்வங்ளையும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமற் போன நிலையில் புள்ளிகளை பெற்ற மாணவச் செல்வங்களையும் மனந்தளராது தொடர்ந்தும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்.

வல்வெட்டித்துறை யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை

| பெயர் | புள்ளி | பெயர் | புள்ளி |
|---|---|---|---|
| ச.சபதா | 151 | ம.லக்சிகா | 123 |
| சி.சிவராமன் | 144 | சி.பூவிகா | 123 |
| ர.திருக்குமரன் | 141 | அ.பிரதிகா | 121 |
| ஆ.அனிதா | 139 | ம.லக்ஸ்மன் | 111 |
| ஆ.அருள்மதி | 128 | வி.விமலராஜ் | 106 |
| சி.கேதீஸ் | 125 | மு.சங்கீதா | 106 |

வல்வெட்டித்துறை யா/சிதம்பரக் கல்லூரி

| பெயர் | புள்ளி |
|---|---|
| வி.மிதுலா | 135 |
| கே.சயந்தன் | 125 |
| சு.அஸ்வினி | 117 |
| ஞா.மதுசாந்தினி | 112 |
| த.பிரவீனா | 110 |
| த.கோபிகா | 105 |
| ந.கீர்த்திகா | 101 |

வாழ்த்துவோர் :-

NVEPF

நடராசா வள்ளியம்மாள். கல்வி ஊக்குவிப்பு நிதியம். ஆதிகோவிலடி. வல்வெட்டித்துறை

(c-5596)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

## 2014 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் சேவை ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் ,உற்பத்தியாளர்கள் ஒப்பந்தகாரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 2014.03.31 ஆம் திகதிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருட்கள்

1) காகிதாதிகள்.எழுதுபொருட்கள்.
2) அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்.இரும்பு அலுமாரி).
3) மேல் நாட்டு மருந்துவகைகள்.வைத்திய உபகரணங்கள்.
4) சித்த மருத்துவ மருந்துகள்.
5) கோலவுடைத் துணிகள். யன்னல் துணிகள். ஏனைய துணிவகைகள்.
6) பாதணிகள். மழைக்கவசம். மற்றும் தோல்பொருட்கள்.
7) கட்டிடப் பொருட்கள்(சீமெந்து, ஓடுகள்) முதலியன.
8) தீந்தைகள். நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன.
9) கற்கள்.மணல்கள்.
10) நீர் வழங்கு பொருட்கள். பி.வி.சி குழாய்கள் முதலியன.
11) வாகன இயந்திர உதிரிப்பாகங்கள். துணை உறுப்புக்கள்.
12) மின்சார இயந்திரப் பொருட்கள். மின் கருவிகள்.
13) விறகு. தேங்காய் மட்டை. கிடுகுகள்.
14) எரிபொருள். உராய்வு நீக்கிகள். கிறீஸ்.
15) இரும்புப் பொருட்கள்.
16) பனைமரங்கள். சலாகைகள்.
17) நூலகங்களுக்குரிய நூல்கள்.
18) வாகனங்களுக்கான பற்றறிகள், ரயர்கள் ரியூப் முதலியன.
19) தீராந்திகள். றீப்பைகள், பலகைகள்.
20) தும்புத்தடி. விளக்குமாறு. நார்க்கடகம். கால்துடைப்பம். இழைக்கயிறு. தேடாக்கயிறு முதலியன.
21) சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமி நாசினிகளும். மருந்துகளும்.
22) கணனி கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள். போட்டோ பிரதி இயந்திரம். போட்டோ பிரதி இயந்திர ங்களுக்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்.

### சேவைகள்

1) அச்சிடுதல்
2) ரியூப் ஒட்டுதல்.
3) ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்.
4) ஏற்றியிறக்கும் வேலைகளிற்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்.
5) சுத்திகரிப்பு. ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்.
6) மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம்.
7) மின் கலங்களுக்கு மீள மின் வலுவூட்டல்.
8) இறப்பர் முத்திரை தயாரித்தல். புளக் தயாரித்தல்.
9) வாகனங்கள் சேவீஸ் செய்தல்.
10) போட்டோபிரதி இயந்திரம், சேவீஸ் செய்தல்.
11) கணனிகள் திருத்தம், சேவீஸ் செய்தல்.

இதற்கான படிவங்களை யா/ழ் மாநகர சபை கொள்வனவுப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா1000 (வற் வரி நீங்கலாக) பெறுமதியான காசு கட்டளை அல்லது தபால் கட்டளை 'ஆணையாளர மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பணமாக செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக்கிளையில் நேரடியாக வேலை நாட்களில் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும் போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரிய நேரத்துக்கு பொருட்கள்/சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவு புத்தகத்தில் இருந்து நீக்கப்படும். இதற்கான விண்ணப்பத்தினை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள். சேவை கள் 2014" எனக் குறிப்பிட்டு ஆணையாளர், மாநகரசபை யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

திருமதி.யோ.பற்குணராஜா
மாநகரசபை முதல்வர்.
யாழ்ப்பாணம்.
28.11.2013

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து (Ko)
நட்சத்திரம்: சித்திரை 4கி.பா: 16 ¾உயரம்: 5’8"
தகைமை/தொழில்: MSc Eng (UK) / பொறியியலாளர்
தொ.இ: B/111

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: பரணி 1கி.பா: 55 ¾
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: MSc, BCS (UK)
தொ.இ: B/113

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 23 செவ் 8 ல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: O/L / விவசாயம்
தொ.இ: B/116

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா: 8 ½ உயரம்: 5’6"
தகைமை/தொழில்: O/L / கடை
தொ.இ: B/117

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1972 இந்து (V)
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 59 ¼ செவ் 8 ல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்: A/L / Executive Secretariat
எதிர்பார்ப்பு: சைவ போசனம்
தொ.இ: G/153

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 1
கி.பா: 22 ½ செவ் 12 ல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்: B.Com / அரச உத்தியோகம்
தொ.இ: G/154

பிறப்பு: 1977 இந்து (Pa)
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா: 47¼ செவ் 7 ல் உயரம்: 5’
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/160

பிறப்பு: 1973 இந்து (V)
நட்சத்திரம்: அவிட்டம் 4கி.பா: 5 ½
உயரம்: 5’2"
தகைமை/தொழில்: A/L / கணக்கு வேலைஎதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்ற வர்களும் பரிசீலிக்கப்படும்.
தொ.இ: G/163


சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# அருட்தந்தையை நாம் தாக்கவில்லை

## பொலிஸார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

காணாமற் போனோரை மீட்டுத்தரக்கோரி கடந்த 16 ஆம் திகதியன்று யாழ்.பொது நூலகம் முன்பாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் எவரையும் தாக்கவில்லையென யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி நேற்று தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த அருட்தந்தை மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். இவ்வாறு பொலிஸார் நடந்து கொண்டமைக்கு காரணம் என்ன? என ஊடகவியலாளர்களால் கேள்வியெழுப்பப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பொலிஸார் அருட்தந்தையை தாக்கிய சம்பவத்தை முற்றாக மறுத்த அத்தியட்சகர் பொலிஸார் குறித்த ஆர்ப்பாட்டத்தில் எவரையும் தாக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு வந்திருந்த பொலிஸார் ஆயுதம் எதனையும் கொண்டு வரவில்லை. அத்துடன் யாரையும் தாக்கும் நோக்கத்தோடும் வரவில்லை என்றார்.

இதேவேளை குறித்த ஆர்ப்பாட்டத்தின் போது ஒரு சில மாகாணசபை உறுப்பினர்கள் பொதுமக்கள் மற்றும் அருட்தந்தை தாக்கப்பட்டதை சம்பவ இடத்தில் நின்றவர்கள் நேரில் கண்டதுடன் தாக்குதலுக்குள்ளானவர்களும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## குடத்தனை நீர்த்தாங்கிக்கான

# நீர்விநியோக நடவடிக்கையை நிறுத்துமாறு கோரிக்கை

(பருத்தித்துறை)

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் கிணற்றிலிருந்து மணற்காடு குடத்தனையிலுள்ள நீர்த்தாங்கிக்கு நீரை விநியோகம் செய்ய மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைக்கு பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே குறித்த கிணற்றிலிருந்து வல்வெட்டித்துறை ஊறணிக்கு குழாய் மூலம் நீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் சிறிய ஊற்றினைக் கொண்ட தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய கிணற்றிலிருந்து மணற்காடு குடத்தனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கிக்கு நீர் விநியோகிக்கப்படுமானால் பிரதேசத்தின் நீர் வளம் எதிர்காலத்தில் கேள்விக்குறியாகி விடுமென பிரதேச மக்கள் சுட்டிக்காட் டியுள்ளனர்.

இக்கிணற்றிலிருந்து ஊறணிக்கு நீர் வழங்குவதையே தாம் எதிர்த்ததாகவும் ஆயினும் 4 வருடங்களாக அச்சேவை இடம் பெற்று வருகின்றது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு மீண்டும் இன்னொரு நீர்த்தாங்கிக்கு நீரை விநியோகிப்பதை தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது நீரை விநியோகிப்பதற்காக கிணற்றினுள் குழாய்களைப் பொருத்துபவர்களிடம் நிறுத்துமாறு மக்கள் கோரிய போது அவர்கள் நீர் விநியோகம் பூர்த்தியானால் தான் ஒப்பந்தகாரர்களுக்கு நிதி கிடைக்கும். எனவே இக்கிணற்றிலிருந்து தற்காலிகமாகவே நீர் விநியோகிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

இந் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தொண்டைமானாறு மக்கள் கையெழுத்து அடங்கிய மகஜர் ஒன்றினை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தலைவர், பருத்தித்துறை பிரதேச செயலர், கிராம அலுவலர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கவுள்ளதாக தெரியவருகின்றது. (அ-9-10)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# பிரதேசசபை தலைவரின் கொலை தொடர்பில் தகவல் வழங்கலாம்

## பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

நெடுந்தீவு பிரதேச சபையின் தலைவரின் கொலைச்சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் பெயர் குறிப்பிடாத கடிதம்மூலம் தகவல் வழங்கலாம் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட் ஜெப்ரி தெரிவித்தார்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு புலனாய்வுக்குழு உட்பட நான்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெடுந்தீவு பிரதேசசபையின் தலைவர் டானியல் றெக்சியன் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி நேர இடைவெளியில் சுடப்பட்டுள்ளார்.

இவர் 5 மீற்றர் தூர இடைவெளியிலிருந்து 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்படும் போது அவர் மது போதை யில் இருந்ததாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவர் சுடப்படுவதற்கு முன்னதாக ஆட்டோ ஒன்றில் வந்துள்ளார்.

ஆனால் அவ் ஆட்டோவும் சாரதியும் யார்? எங்கு சென்றார்கள் என்பது தெரியவில்லை. அவ் ஆட்டோ சாரதி இனங்காணப்பட்டால் கொலை விசாரணையில் புதிய திருப்பம் ஏற்படலாம்.

பிடரிப்பகுதியினூடாக சன்னம் பாய்ந்துள்ளதோடு மறைவிலிருந்தே அவர் சுடப்பட்டுள்ளார்.

கொலை தொடர்பில் அயலவர்கள் எவரும் எமக்கு சாட்சியளிக்கவில்லை. கொலைபற்றி எமக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தகவல் வழங்கமுடியும். (அ-4)

# பாதீனிய ஒழிப்பு மாதம் நாளை முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாதீனிய ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் சிரமதானப் பணிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் முற்பகல் 8 மணிக்கு நிலாவரைப் பகுதியில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக வட மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

வடமாகாண விவசாய அமைச்சினால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் பாதீனிய ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இம்மாதத்தில் பயன்தரு பயிர்கள், கால்நடைகள் மற்றும் மனிதர்களுக்கு பெரும் தீங்கினை ஏற்படுத்தக் கூடிய பாதீனிய களைகளை அழிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன

இதன் ஆரம்ப நடவடிக்கையாகவே நிலாவரைப் பகுதியில் சிரமதானம் மூலம் பாதீனியத்தை அழிக்கும் சிரமதானப் பணி ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. இதேவேளை குறித்த தினத்தில் விவசாய நிலங்கள், தரிசு நிலங்கள், வீட்டு சுற்றாடல் என்பவற்றில் உள்ள களைகளை அதன் உரிமையாளர்கள் அழிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இம்மாதம் முழுவதும் பாதீனியத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு வடமாகாண விவசாய அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-5)

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பூநகரி பிரதேச சபையின் பொதுநூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் நூலகரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**அபிநயத்துடன் கதை கூறல் போட்டி**

சிவரூபன் யாழினி (கிளி/ஞானியர்மடம் அ.த.க.பாடசாலை), ராஜ்குமார் வாசுகி (கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை), கௌரிவிராசன் அக்ஷயன் (கிளி/செல்லியாதீவு அ.த.க. பாடசாலை)

**சுவரொட்டி (ஓவியம்) போட்டி**

சுப்பிரமணியம் கயலழகி (கிளி/கறுக்காய்த்தீவு ம.வி), சிறிதரன் சர்மிளா (கிளி/கறுக்காய்த்தீவு ம.வி), ஜெ.தர்மினி (கிளி/முக்கொம்பன் அ.த.க.பாடசாலை)

**கட்டுரை ஆக்கம் (கீழ்ப்பிரிவு)**

**தரம் 09-11 வரை**

லோ.கார்த்திகாயினி (கிளி/ஞானியர்மடம் அ.த.க.பாடசாலை), கே.லக்சியா (கிளி/கறுக்காய்த்தீவு ம.வி), வி.சன்சியா (கிளி/பூநகரி ம.வி)

**கட்டுரை ஆக்கம் (கீழ்ப்பிரிவு)**

ந.அகல்யா (கிளி/முழங்காவில் ம.வி), அ.டென்சியா (கிளி/முழங்காவில் ம.வி)

**கவிதை ஆக்கம் (கீழ்ப்பிரிவு)**

**தரம் 06-10 வரை**

ச.சயிந்தா (கிளி/ஞானியர்மடம் அ.த.க. பாடாலை), சி.தேனுஜன் (கிளி/பூநகரி ம.வி), கே.தர்சிகா (கிளி/கறுக்காய்த்தீவு ம.வி)

**கவிதை ஆக்கம் (கீழ்ப்பிரிவு)**

வ.விஷ்ணுசாந்தி (கிளி/முழங்காவில் ம.வி)

**கட்டுரை ஆக்கம் (மேற்பிரிவு)**

**தரம் 12-13 வரை**

ம.நேமிகா (கிளி/பூநகரி ம.வி), ஸ்ரீதாட்ஷாயினி (கிளி/பூநகரி ம.வி), வி.சரண்யா (கிளி/பூநகரி ம.வி)

**கட்டுரை ஆக்கம் (மேற்பிரிவு)**

ஜெ.தர்மிகா (கிளி/பூநகரி ம.வி)

**கவிதை ஆக்கம் (மேற்பிரிவு)**

**தரம் 11-13 வரை**

வி.சரண்யா (கிளி/பூநகரி ம.வி), ஸ்ரீதாட்ஷாயினி, (கிளி/பூநகரி ம.வி)

**கவிதை ஆக்கம் (மேற்பிரிவு)**

ந.யாழினி (கிளி/முழங்காவில் ம.வி)

**கட்டுரை ஆக்கம் (திறந்த போட்டி)**

க.வேணுகா (பூநகரி), வி.சரண்யா (நெடுங்குளம், பூநகரி), க.கயல்விழி (பூநகரி) (ம-84)

# வவுனியாவில் மாபெரும் இளைஞர் முகாம்



(குருமன்காடு)

வவுனியா மணிபுரம் கிராமத்தில் சர்வோதய நிறுவனத்தின் சாந்திசேனா இளைஞர் அமைப்பினால் கடந்த 22 ஆம் திகதி தொடக்கம் கடந்த 27 ஆம் திகதி வரை மாபெரும் இளைஞர் முகாம் நடைபெற்றது.

இவ் இளைஞர் முகாம் தமிழ், சிங்கள இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

அதன் அடிப்படையில் மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டத்திலிருந்து சிங்கள இளைஞர், யுவதிகள் வவுனியா மாவட்டம் மணிபுரம் கிராமத்திற்கு அழைத்துவரப்பட்டு கிராமத்தின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டு தமிழ் பணபாடு, கலாசாரம் என்பன பரிமாறப்பட்டன.

அத்துடன் மணிபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இளைஞர் சக்தியினால் சிரமதானம், வீதிதிருத்தம், குடிநீர் கிணறு திருத்தம் போன்ற வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டன.

தொடர்ந்து இளைஞர், யுவதிகளுக்கான விளையாட்டு போட்டிகள், கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் தீப்பாசறை நிகழ்வும் இடம்பெற்றன.

இளைஞர் சக்தியினூடாக இனங்களுக்கிடையே ஒரு சிநேகபூர்வமான உறவை வலுப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்று நிறைவு கண்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட இணைப்பாளர் சு.உதயகுமாரன், சர்வோதய வடமாகாண ஆலோசகர் எஸ்.சுப்ரமணியம், சர்வோதய சாந்திசேனா திட்ட பணிப்பாளர் எச்.ரவீந்திரகந்தகே ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மணிபுரம் சாந்தி சேனா இளைஞர் குழுவிற்கு கணனிகளை வழங்கினர். (ம-250)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இயற்கை சமநிலை மோசமாக பாதிக்கப்படுகிறது

## வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

(ஒட்டுசுட்டான்)

**ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வாவெட்டிமலை, கொடிதூக்கி மலை ஆகியவற்றின் சுற்றுப்புற பிரதேசங்களில் மலைகள் சட்டவிரோதமான முறையில் உடைக்கப்பட்டு வளங்கள் அள்ளப்படுவதால் அப்பகுதியின் இயற்கைச் சமநிலை மோசமாகப் பாதிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட மக்களின் தகவலை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற ரவிகரனுக்கு முதலில் அங்கு நுழைய அனுமதி மறுக்கப் பட்டது.

எனினும் சிறுநேர வாக்குவாதத்தின் பின் உள்ளே சென்ற ரவிகரன் குறிப்பிட்ட தகவல்களை நேரில் ஆராய்ந்தார். அங்கு பாறைகள் உடைக்கப்பட்டு மிக வேகமாக வளங்கள் அகற்றப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தினார்.

அவற்றுள் இரு வேறு இடங்களில், அனுமதிக்கப்பட்டதை விட மிக ஆழத்திற்கு மோசமாக நிலவளம் சுரண்டப்படுவதைக் கண்டு கொண்ட ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த சட்டவிரோத நில அகழ்வால் அருகிலுள்ள தமிழ் மக்களின் வீடுகள் மற்றும் கிணறுகளில் வெடிப்புக்கள் ஏற்படுகிறது. இதனால் அப்பகுதியில் மக்களின் இருப்பு உறுதிப்படுத்தப்படமுடியாத சூழ்நிலை நிலவுகிறது.





பிரதேச மக்களின் தகவலையடுத்து அங்கு நேரில் சென்று சம்பவத்தை அவதானித்தேன். B.P.P, W.K.K ஆகிய நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தகாலம் முடிவடையும் போது திரும்பவும் அனுமதிகள் புதிப்பிக்கப்பட்டு தாராளமாக எம் வளங்கள் அள்ளப்படுகின்றன.

நேரில் எங்கள் வளங்கள் பறிபோவதைக் கண்ட நான் அதிர்ச்சியுற்றேன். கல்குவாரியைப் பொறுத்தவரை, நிலமட்டத்திற்கு கீழாக 8m (சுமார் 25 அடி ) வரையே அகழ அனுமதி இருக்கும் நிலையில், (கனிய வள துறைசார் பொறியியலாளர் ஒருவரிடம் நான் உறுதிப்படுத்திய தகவல் ), அங்கே ஓரிடத்தில் நிலமட்டத்திற்கு கீழாக சுமார் 100 அடிக்கும் மேல் அகழ்வு இடம்பெறுகிறது.

இன்னோரிடத்தில் சுமார் 75 அடிக்கும் மேல் இப்படி சட்டவிரோதமான முறையில் அகழ்வு இடம்பெறுவதால் வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பிரதேசத்தின் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுகிறது.

நீண்டகாலமாக நடந்து வரும் இந்த நில அகழ்வை கண்காணிக்க வேண்டிய அதிகாரிகள் கண்டுகொள்ளாதது ஏன் என சில கேள்விகள் எழுகின்றது. மண்ணை சுரண்டி, இயற்கையை அழிக்கும் இந்நடவடிக்கை கண்டிக்கத்தக்கது.

இது குறித்து உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுப்பதாக அப்பகுதி மக்களிடம் தெரிவித்தேன் என அவர் தெரிவித்தார். (ம-6)

# பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் 46 முஸ்லிம் குடும்பங்களின் காணிப் பிரச்சினைக்கு இணக்கப்பாடு

(குருமன்காடு)

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் 46 முஸ்லிம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட காணி தொடர்பில் ஏற்பட்ட முறுகல் நிலைமை சமரசப் பேச்சுவார்த்தையின் பின்னர் இணக்கப் பாட்டிற்கு வந்துள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவித்தார்.

மேற்படி 46 முஸ்லிம் குடும்பங்களும் பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் வசிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் 46 முஸ்லிம் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. இதற்கு பொன்தீவுக்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததனால் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் 46 முஸ்லிம் குடும்பங்களுக்கு நானாட்டான் பிரதேச செயலகத்தின் ஊடாக காணிகள் ஒதுக்கப்பட்டு அந்த மக்கள் தங்களது காணிகளில் வீடுகளை அமைக்கும் ஆரம்பப் பணிகளில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்கு பொன்தீவுக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததனால் வீடுகள் அமைக்கும் வேலைத்திட்டங்கள் கைவிடப் பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து நானாட்டான் பிரதேச செயலாளர் எஸ்.சந்திரையா, மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டிமேல் மற்றும் பொன்தீவுக் கண்டல் கிராம மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்களுக்கு இடையில் தொடரச்சியான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப் பட்ட காணி தொடர்பில் ஏற்பட்ட முறுகல் நிலைமை சமரசப் பேச்சுவார்த்தையின் பின்னர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும் பொன்தீவுக்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட 46 முஸ்லிம் குடும்பங்களும பூவரசங்குளம் பகுதியில் உள்ள உறவினர்களுடைய வீடுகளில் வாழ்ந்து வருகின்ற இந்தக் குடும்பங்கள் வீடுகளை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியும் திரும்பும் தறுவாயில உள்ளது. இந்தக் குடும்பங்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன.

46 முஸ்லிம் குடும்பங்களுக்குமான வீட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படும். பொன்தீவுக்கண்டல் கிராமத்தில் தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடுகள் எவையும் இன்றி அந்த மக்களுக்கு சகல உதவிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-250)




# பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு கடல் உணவு ஏற்றுமதியாளர் சங்க பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வள துறைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தலைவர் ம.குணசிங்கராசா தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே ஏற்றுமதியாளர்கள் அனைவரையும் இப்பொதுக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-267)



வவுனியா மாவட்டத்தில் பல்வேறு திணைக்களங்களிலும் பணியாற்றும் தமிழ் அரச உத்தியோகத்தர்களுக்காக மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசியமொழி கற்கை மற்றும் பயிற்சி நிறுவகத்தால் நடத்தப்பட்ட சிங்கள மொழிப்பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்வுகளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் உரையாற்றுவதையும் சான்றிதழ் வழங்கப்படுவதையும் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்

(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

# புலிகளை அழிக்க உதவிய சர்வதேசத்திற்கு அரசு என்ன பதிலை கூறப் போகின்றது

## கூட்டமைப்பின் தலைவர் கேள்வி



(கொழும்பு)

**தமிழ் மக்கள் உட்பட ஏனைய சமூகத்தினர் எதிர்கொள்ளும் நீண்டகால பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடல் நடத்த வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

வரவு செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த மக்களின் உரிமைகளை முழுமையாக பாதுகாப்பதற்கு அரசாங்கம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என்ற நோக்குடனே புலிகளை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் ஒத்துழைப்பை வழங்கின.

இவ்வாறு ஒத்துழைத்த சர்வதேச சமூகத்திற்கு அரசு என்ன பதிலை வழங்கப்போகின்றது என்று நான் இந்த சபையில் கேட்க விரும்புகிறேன்.

பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரண்டும் மிக முக்கியமானது. இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பொறுப்புக் கூறுதல் இல்லா விட்டால் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. எனவே தமிழ் மக்களின் ஏற்றுக் கொள்ளும் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு சிறந்த தீர்வை வழங்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுநலவாய அரச தலைவர்களின் உச்சி மாநாட்டின் தலைமை பொறுப்பை வகித்த நிலையிலேயே இந்த வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்.

இந்த தலைமை பொறுப்பு வகிப்பதன் மூலம் அவருக்கு மேலும் பாரிய பல பொறுப்புக்கள் உள்ளன. இந்நிலையில் இந்த தலைமைத்துவத்தின் மூலம் சிறந்த ஒரு அனுகூலமான முடிவை தரும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

இறுதிக்கட்ட மோதலின் போது மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றது குறித்தும் சனல் 4 ஊடகத்தின் வீடியோக்கள் தொடர்பாகவும் சம்பந்தன் எம். பி. தொடர்ந்து உரையாற்றினார்.

இதற்கு ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ. எச். எம். அஸ்வர், பீ. எச். பீ. பியசேன ஆகியோர் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். சம்பந்தன் எம்.பியின் உரைக்கு ஆளும் தரப்பு எம்.பிக்கள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து ஒரு கட்டத்தில் அவர் பேச்சை நிறுத்தி ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். (அ-2)

# நாம் ஆட்சி அமைத்தால் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்போம்

## சீமான் தெரிவிப்பு



(சென்னை)

நாம் ஆட்சிக்கு வந்தால் தமிழீழ மாவீரர் தினத்தை அரசு நிகழ்ச்சியாக நடத்துவோம் என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை முன்னிட்டு நாம் தமிழர் கட்சி சார்பில் புதுக்கோட்டையில் நடத்த ஏற்பாடுகள் நடந்தது. பொது இடத்தில் நடத்த அனுமதி கிடைக்காததால் ஒரு மண்டபத்தில் அரங்க கூட்டமாக தொடங்கியது. அரங்கில் விடுதலைப் புலிகளின் பல படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறிப்பாக லெப்டினன் சங்கர் படம் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டது. மேடையின் பின்பக்கம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர்கள் துயிலுமில்லத்தில் விளக்கு ஏற்றும் காட்சி படமாக வைக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

மாவீரர் தினத்தை பொது இடத்தில் நடத்த அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

திராவிடர் கட்சிகள் ஆட்சியில் இருக்கும் போது இப்படியான தடைகள் ஏற்படுத்துவது வழக்கமாகி விட்டது. அ.தி.மு.கவும் இதற்கு விதிவிலக்கல்ல. அதனால்தான் நாம் ஆட்சிக்கு வர வேண்டும். நாம் ஆட்சிக்கு வந்தால் மாவீரர் தினத்தை அரசு நிகழ்ச்சியாக நடத்துவோம். அப்போது யாராலும் தடுக்க முடியாது.

இன்றும் பாதுகாப்பு இன்றியே நம் உறவுகள் ஈழத்தில் இருக்கிறார்கள். இந்தியா போன்ற நாடுகள் அவர்களின் பாதுகாப்பை, வாழ்க்கையை பற்றி கவலைப்பட்டதாக தெரியவில்லை.

இந்த நிலை மாற நம்மை தமிழன் ஆள வேண்டும் என்றார். (அ-2)

# போர்க்குற்ற விசாரணைக்கு இடமளிக்கப் போவதில்லை

## ஐ.தே.க.எம்.பி.பி.ஹரிசன் தெரிவிப்பு

இலங்கையின் படையினரையோ அரச தலைவர்களையோ சர்வதேச நீதிமன்றத்தின் மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரச தலைவரை சர்வதேச நீதிமன்றத்தின் மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல இடமளிக்கப் போவதில்லை. அரச தலைவரை மட்டுமல்ல இராணுவ அதிகாரிகள் உட்பட ஒரு இராணுவ வீரரையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல இடமளிக்கப் போவதில்லை.

இலங்கையின் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிர்களை தியாகம் செய்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ நாடு ஒன்றை உருவாக்கி கொடுத்தனர்.

இந்நிலையில், வடக்கிலுள்ள சில அடிப்படைவாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வந்து இனவாதத்தை ஏற்படுத்தும் வகையில் பேசி வருகின்றனர்.

இவர்கள் காகத்தின் கூட்டில் குயில் முட்டையிடும் வேலையை செய்ய ஆரம்பித்துள்ளனர். அதற்கு இடமளிக்கப் போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் அமைதியாக எப்போதும் தன்னை அர்ப்பணித்து வந்துள்ளது.

இதனால் மீண்டும் நாட்டின் இளைஞர்களின் உயிர்களை பலி கொடுக்க நாங்கள் தயாரில்லை. தலைக்கு மேல் பறக்க முடியும். ஆனால் தலையில் கூடுகளை கட்ட தயாராக வேண்டாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூறி வைக்க விரும்புகிறேன் என்றார். (அ-2)

# போதைப்பொருளை ஒழிக்க போராட்டம்


கொழும்புக்கு ஹெரோயின் போதைப் பொருளை வரவழைப்பவர்களின் பெயர்களும் அவர்களின் ஊர் விபரங்களும் தனக்கு தெரியும் எனவும் அதுபற்றி அவசியமான இடங்களில் அறிவித்துள்ளதாகவும் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பெயர்களை ஊடகங்களில் வெளியிடுவது நாகரிகமான செயல் அல்ல. தற்பொழுது கைது செய்யப்படும் நபர்கள் தான் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பிரதிபலனே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் போதைப் பொருள் விற்பனையாளர்களை அங்கிருந்து விரட்டும் போராட்டம் ஆரம்பிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் போதைப் பொருள் விற்பனையாளர்கள், பாதாள உலக குழுவினர், சண்டியர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி, முதுகெலும்புள்ளவர்களை பொதுபலசேனாவில் இருந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (அ-2)





யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான பரிசளிப்பு தின நிகழ்வும் பெற்றோர் தின நிகழ்வும் அண்மையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது விருந்தினர்கள் மேடையில் அமைந்திருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மல்லாகச் செய்தியாளர்)

# தேவை தெளிவு! குருட்டு நம்பிக்கையல்ல...



ஆன்மீகம் 53

ஒரு மனிதனுக்குத் தேவை தெளிவு, குருட்டு நம்பிக்கை அல்ல. ஒரு கூட்டத்தின் நடுவே நீங்கள் நடக்கும் போது உங்கள் பார்வை தெளிவாக இருந்தால் ஒவ்வொருவரும் எங்கு இருக்கின்றனர் என்று உங்களால் பார்க்க முடிந்தால் கூட்டத்தில் ஒருவரைக் கூடத் தொடாது நீங்கள் மிகச் சுலபமாக நடந்து சென்றுவிடுவீர்கள்.

உங்கள் பார்வை தெளிவாக இல்லை. ஆனால், நீங்கள் அதீத நம்பிக்கை உடையவர் என்கிற போது எல்லோர் மீதும் நடந்து செல்வீர்கள். தெளிவில்லாத காரணத்தால் தன்னம்பிக்கை நல்ல மாற்றுப் பொருள் என்று கருதுகிறீர்கள். அது ஒருகாலமும் அப்படி ஆக முடியாது.

உதாரணமாக நீங்கள் உங்கள் வாழ்க்கையின் முக்கியமான முடிவுகளையெல்லாம் இப்படி எடுக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒரு நாணயத்தைச் சுண்டி விடுங்கள். சரி, தலை விழுந்தால் முதல் திட்டப்படி செயற்படுவோம். ஒருவேளை பூ விழுந்துவிட்டால் இரண்டாம் திட்டப்படி செயற்படுவோம் என்று நீங்கள் முடிவெடுத்து செயற்பட்டால் உங்கள் திட்டம் வேலை செய்ய 50 சதவீதம் வாய்ப்பிருக்கிறதா இல்லையா?

வாழ்க்கையில் 50 சதவீதம்தான் நீங்கள் சரியாக இருக்கிறீர்கள் என்கிறபோது நீங்கள் இரண்டு தொழில்கள்தான் செய்ய முடியும்.

## எந்த சூழ்நிலையிலும் புத்தியுடன், அன்புடன், ஆனந்தத்துடன் வாழ கற்றுக்கொள்ளுங்கள்



ஒன்று நீங்கள் வானிலை அறிக்கையாளராகவோ, அல்லது ஜோசியக்காரராகவோ இருக்க முடியும். இந்த பூமியில் நீங்கள் வேறெந்த வேலையும் செய்ய முடியாது.

**சற்றுவளைந்து கொடுங்கள்!**

நம் வாழ்க்கையில் பலவிதமான சூழ்நிலைகளைக் கையாள்வதற்கு, நமக்கு வெவ்வேறுவிதமான ஆளுமை குணங்கள் தேவை. அதில் நீங்கள் நீரோடைபோல் வளைந்து கொடுக்கும் தன்மையுடன் இருந்தால், நீங்கள் எடுத்திருக்கும் பாத்திரத்தில் உங்களால் முழு திறனுடன் செயற்பட முடியும். அதில் சிறிதும் சிக்கலிருக்காது.

ஆனால், பலர், சூழ்நிலைக்கேற்றவாறு வளைந்து கொடுக்க முடியாது கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்களுக்கு பிடிக்காதவற்றையும் புரியாதவற்றையும் எதிர்கொள்ளும் போது அவர்கள் சொல்ல முடியாத பாதிப்பிற்கு உள்ளா கிறார்கள்.

நீங்கள் அதை உடைக்க வேண்டுமென்றால் நீங்கள் அதை முற்றிலும் வேறுவிதமாக அணுக வேண்டும். நீங்கள் செய்யக்கூடிய மிக எளிமையான செயல் இது.

உங்களுக்குப் பிடிக்காத ஒருவருடன் சேருங்கள். அவர்களுடன் சிறிது நேரம் செலவிடுங்கள். மிக அன்பாக, ஆனந்தமாக!

உங்களுக்குப் பிடிக்காதவற்றைச் செய்யுங்கள். உங்களுக்குப் பிடிக்காதவர்களுடன் இருங்கள்.

அந்த சூழ்நிலையிலும் நீங்கள் புத்தி யுடன், அன்புடன், ஆனந்தத்துடன் வாழக் கற்றுக் கொண்டால் அதுவே உங்களுக்கு வெற்றி!

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இந்தியா விலகிக்கொண்டதும் இலங்கைக்கு விசிட் அடிக்கும் வெளிநாட்டுக் கப்பல்கள்




ஈரானுக்கு சொந்தமான ஒரு நீர்மூழ்கிக் கப்பல் மற்றும் இரு போர்க் கப்பல்கள் கொழும்பு செல்வதற்காக புறப்பட்டு விட்டன. அந்தக் கப்பல்கள் இன்னமும் கொழும்பு வந்து சேரவில்லை. ஆனால் அதற்குமுன், ரஷ்ய கடற்படைக்கு சொந்தமான 5 போர்க் கப்பல்கள் ஒரே நேரத்தில் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இந்த 5 கப்பல்களும் எதற்காக வந்துள்ளன?

கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் அண்மையில் (திங்கட்கிழமை) அனுப்பி வைத்துள்ள அறிக்கையில், "ஐந்து கப்பல்களில் உள்ளவர்களும் ஓய்வெடுத்துச் செல்வதற்காக இலங்கை வந்துள்ளார்கள்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஐந்து கப்பல்களும், ரஷ்ய கடற்படையில் உள்ள பெரிய கப்பல்கள். Admiral Panteleyev Peresvet Admiral N e v மற்றும், Bech s enga என்பவைதான் அவற்றின் பெயர்கள். விளாடிவோஸ்டாக் என்ற கடற்படைத் தளத்தை சேர்ந்தவை. மெடிட்டரேனியன் கடலின் வெவ்வேறு பகுதிகளில் நடமாடிக் கொண்டிருந்த இந்த 5 கப்பல்களும், ஒரே தினத்தில், கொழும்பு துறைமுகம் வந்து சேர்ந்திருக்கின்றன.

பொதுவாகவே, எந்தவொரு நாடும் தமது கடற்படையின் இரண்டுக்கு மேற்பட்ட கப்பல்களை தமது நாட்டுக்கு வெளியே ஒரேயிடத்தில் ஒரே நேரத்தில் கொண்டுவருவதில்லை. மெடிட்டரேனியன் கடலில் இருந்து ரஷ்யா செல்லும் கடல் பாதையிலும் இலங்கை இல்லை.

சுமார் 15 ஆண்டுகளின்பின் ரஷ்ய போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன. அத்துடன், இதுவரை இலங்கை பக்கமே எட்டிப் பார்த்திராத ஈரானிய நீர்மூழ்கிக் கப்பலும் இலங்கைக்கு வந்துகொண்டு இருக்கிறது. அதற்கு பாதுகாப்பாக வேறு இரு போர்க் கப்பல்கள் வருகின்றன.

இதே நேரத்தில், இலங்கையின் தென் பகுதியில் உள்ள காலியில், இலங்கை பாதுகாப்பு அமைச்சு, ஏற்பாடு செய்துள்ள சர்வதேசகடற்படை மாநாடு ஒன்று "Emerging Maritime Trends in the Indian Ocean" என்ற பெயரில் தொடங்கியது. இதில் 35 நாடுகளைச் சேர்ந்த கடற்படை அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

என்ன நடக்கிறது இலங்கையில்?

இதற்கெல்லாம் ஒரே அர்த்தம், இலங்கை இந்தியக் கடல் பகுதியில் ஒரு Maritime Hub ஆக மாறி வருகிறது.

1980களில் இருந்தே பல நாடுகள் இலங்கையின் துறைமுகங்களை தமது Maritime Hub ஆக மாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளன. அப்போதெல்லாம் அதை தடுத்துக் கொண்டிருந்த நாடு இந்தியா. காரணம், இலங்கையில் இப்படியொரு ட்ரான்சிட் தளம் அமைவது, இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம்.

1980களின் ஆரம்பத்தில், அமெரிக்கா இப்படியொரு முயற்சியில் இறங்கியது. அவர்கள் திருகோணமலை துறைமுகத்தில் கண் வைத்தார்கள். அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

இந்த விவகாரம் தமக்கு பின்னாட்களில் அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்று புரிந்து கொண்ட அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, அதை எதிர்த்தார்

இலங்கை அரசியல்வாதிகளில் மிகவும் தந்திரசாலிகளில் ஒருவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனே. அவர், அமெரிக்கா கொல்லைப்புறமாக வருவதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா (VOA) தமது ட்ரான்ஸ்மிஷன் சென்டரை இலங்கையில் இரணவில என்ற இடத்தில் அமைப்பதற்கான அனுமதியை வழங்கினார்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியால் அதை தடுக்க முடியவில்லை. அவர் தமது பங்குக்கு ஒரு தந்திரம் செய்து, இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுத்தார்.

ஆம். 1983-ல் ஈழ போராளி இயக்கங்களுக்கு இந்திய மத்திய அரசு ஆயுதங்களும, பயிற்சியும் வழங்கியதன் முக்கிய பின்னணி இதுதான்.

ஈழ விடுதலை இயக்கங்களுக்கு இந்தியா எதற்காக பயிற்சி கொடுக்கிறது என்பதை ஜே.ஆர்.ஜெயவர்த்தனே புரிந்து கொண்டார். அதையடுத்து, வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா ஒப்பந்தத்தை அடுத்து அமெரிக்காவுடன் செய்துகொள்ள தயாராக இருந்த திருகோண மலை துறைமுக ஒப்பந்தத்தை கைகழுவிவிட்டார்.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை அடித்தார். இப்போது மீண்டும் சரித்திரம் திரும்புகிறது.

இலங்கை துறைமுகங்கள் வெவ்வேறு நாடுகளின் Maritime Hub ஆக மாறி வருகின்றன.

ஹம்பாந்தோட்ட துறைமுகத்தை சீனா முழுமையாக கட்டியே கொடுத்திருக்கிறது.

ஏன் இப்படி நடக்கிறது?

இலங்கையில் Maritime Hub அமைப்பதை இந்தியா விரும்பாது என மற்றைய நாடுகளுக்கு தெரியும்.

இந்தியாவும், இலங்கையுடன் நெருக்கமாக இருந்ததால், அந்த நாடுகள் ஒதுங்கியிருந்தன. தமிழகத்தில் பலத்த எதிர்ப்பு இருந்தபோதிலும் இந்திய மத்திய அரசும், இலங்கையுடன் கூட்டாளியாக தொடர்ந்த பெரிய காரணமும் இதுதான்.

கொமன்வெல்த் மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் போகாது விட்டபோது மத்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், "இந்திய பிரதமர் மாநாட்டை புறக்கணிக்கவில்லை. வேறு வேலைகள் காரணமாக வரவில்லை" என எக்ஸ்கியூஸ் சொல்லிவிட்டு வந்ததும் அதற்காகத்தான்.


ஆனால், கொமன்வெல்த் மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் போகாதுவிட்டமை, மற்றைய நாடுகளுக்கு பாஸிட்டிவ் சிக்னலை கொடுத்துவிட்டது.

இலங்கையும், இந்தியாவைப் பற்றி கவலைப்படாது மற்றைய நாடுகளுடன் டீல் பண்ண தொடங்கியிருக்கிறது. அதுதான், திடீரென போர்க்கப்பல்கள் எல்லாம் கொழும்புக்கு விசிட் அடிக்கின்றன.

-இணையம்-




# புத்திசாலி ரம்மி!



ஆலந்தூரில் ரம்மி என்றொரு சிறுவன் இருந்தான். அவன் மிகவும் புத்திசாலி. தைரியசாலியும் கூட. ஒருநாள் அவன் பள்ளி விடுமுறைக்கு பக்கத்து ஊரில் இருக்கும் தன் பாட்டி வீட்டிற்கு செல்ல ஆசைப்பட்டான். அவன் தந்தை அவனை தனியாக பாட்டியின் ஊருக்கு அனுப்பி வைக்க ஆசைப்பட்டார். ஆனால், ரம்மியின் அம்மாவிற்கு அது சிறிதும் பிடிக்கவில்லை. என் பிள்ளையைத் தனியே அனுப்ப மாட்டேன் என்று அம்மா கூறினாள்.

என் மகன் தைரியக்காரன். அவன் எந்த எதிர்ப்பையும் சமாளித்துவிடும் திறமை படைத்தவன். வீணாக பயப்படாதே என்று தைரியம் கூறினார். தந்தை மகனுக்கு கட்டுச்சோறு கட்டிக் கொடுத்து பக்கத்தூருக்கு அனுப்பி வைத்தார். ரம்மியும் வெகு பத்திரமாக தன் பாட்டி வீட்டுக்கு போய் சேர்ந்தான். பாட்டி பேரனை இரண்டு மூன்று நாட்கள் தன் வீட்டில் வைத்திருந்தாள். பின்னர் அவனை அவரது பெற்றோரிடம் திருப்பி அனுப்பிவைத்தாள். திரும்பிச் செல்லும் தன் பேரனுக்கு காதில் ஒரு தங்க கடுக்கனைப்போட்டு விட்டாள். பேரனும் பாட்டியிடம் சொல்லிக் கொண்டு தன் பெற்றோரிடம் புறப்பட்டான். பாதி தூரம் நடந்து வந்ததும் அவனுக்கு தண்ணீர் தாகம் எடுத்தது. தூரத்தில் ஒரு சிறிய கிணறு தெரிந்தது. உடனே அந்தக் கிணற்றிலிருந்து எப்படி நீர் இறைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் அந்த வழியாக ஒரு முரடன் வந்தான். அவன் ஒரு திருடன். அவன் தனியாக வந்த ரம்மியைப் பார்த்தான். அவன் காதில் தங்கக் கடுக்கன் இருப்பதையும் பார்த்தான். உடனே அதை அபகரிக்க முடிபு செய்தான். தன் காதிலிருக்கும் கடுக்கனையே திருடன் உற்றுப்பார்ப்பதை ரம்மி அவதானித்தான். தன்னை அடித்துப் போட்டுவிட்டோ அல்லது கொன்றுவிட்டோ தனது காதுக் கடுக்கனை திருடன் திருடிக் கொண்டு போய்விடுவான் என்று ரம்மிக்கு நன்கு புரிந்துவிட்டது. மறுநிமிடம் ஏதோ யோசித்தான். மிகுந்த பயத்துடன் அழுவதுபோல அழத் தொடங்கினான்.

சிறுவன் கிணற்றருகில் நின்றதையும் கிணற்றை எட்டிப் பார்ப்பதையும் பின்னர் திடீரென அழுவதையும் பார்த்த திருடன் ஒரு நிமிடம் விழித்தான். தம்பி ஏன் இப்போது நீ அழுகிறாய்? என்று கேட்டான்.

அண்ணா! என் பாட்டி எனக்கு இந்த ஒரு சவரன் தங்க கடுக்கனையும் ஐந்து சவரன் சங்கிலியையும் போட்டுவிட்டார்.

நான் இந்த வழியாக வந்து கொண்டிருந்தபோது தண்ணீர் தாகம் எடுத்ததால் இந்த கிணற்றடிக்கு வந்தேன். கிணற்றில் நீர் இருக்கிறதா என எட்டிப்பார்த்தேன். அப்போது என் சங்கிலி கிணற்றுக்குள் விழுந்துவிட்டது. அதனை எடுக்காமல் வீட்டிற்கு திரும்பினால் என் அப்பா என்னைத் தண்டிப்பார் என்று கூறி அழுதான்.

இதைக் கேட்ட திருடனின் மனம் ஏதோ திட்டம் இட்டது. ஒரு சவரன் கடுக்கனைவிட ஐந்து சவரன் சங்கிலி மிகவும் விலையுயர்ந்ததல்லவா? எனவே, அதனை கிணற்றுக்குள் இறங்கி தேடி எடுக்க திருடன் முடிபு செய்தான்.

தம்பி நீ அழாதே! இதோ கிணற்றுக்குள் இறங்கி உன் சங்கிலியை நான் எடுத்து வருகிறேன் என்று கூறினான் திருடன். மறுநிமிடம் அவன் கிணற்றுக்குள் இறங்கினான்.

இதைக் கண்டதும் சிறுவன் அந்த இடத்தை விட்டு சிட்டாக பறந்தோடி விட்டான். திருடன் கிணற்றுக்குள் சங்கிலியை தேடோ தேடென்று தேடிக் கொண்டிருந்தான்.

அதற்குள் ரம்மி தன் ஊருக்குள் ஓடி வந்துவிட்டான். தன் வீட்டிற்குச் சென்று பெற்றோரிடம் நடந்ததைக் கூறினான்.

பெற்றோர் அவனது சாமர்த்தியத்தையும் தைரியத்தையும் பெரிதும் புகழ்ந்தனர்.

குட்டீஸ்... எதிர்பாராது நமக்கு ஆபத்து வருவது இயற்கை.

ஆனால், அந்த ஆபத்து நேரத்தில் அஞ்சாது அதை எதிர்கொண்டு சமாளித்து வெற்றிபெற வேண்டும்.

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

11.2013
30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1612- பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் படைகளுக்கும் போர்த்துக்கீசருக்கும் இடையில் இந்தியக் கரையில் சுவாலி என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் பிரித்தானியர் வென்றனர்.
- 1700-சுவீடனின் பன்னிரண்டாம் சார்லஸ் தலைமையில் 8, 500 இராணுவத்தினர் எஸ்தோனியாவில் நார்வா என்ற இடத்தில் பெரும் ரஷ்யப் படைகளை வென்றனர்.
- 1718- நோர்வேயின் பிரெட்ரிக்ஸ்டன் கோட்டை முற்றுகையின் போது சுவீடன் மன்னன் பன்னிரண்டாம் சார்லஸ் இறந்தான்.
- 1782-அமெரிக்கப் புரட்சிப் போர்: ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் இரண்டுக்கும் இடையே ஆரம்ப அமைதி உடன்பாடு பாரிசில் கையெழுத்திடப்பட்டது.
- 1803-ஸ்பானியர்கள் லூசியானாவை பிரான்சுக்கு அதிகாரபூர்வமாகக் கையளித்தனர். பிரான்ஸ் இப்பிரதேசத்தை 20 நாட்களின் பின்னர் ஐக்கிய அமெரிக்காவுக்கு விற்றது.
- 1806-நெப்போலியனின் படைகள் போலந்து தலைநகர் வார்சாவைக் கைப்பற்றினர்.
- 1853-ரஷ்யப் பேரரசின் கடற்படை வடதுருக்கியில் உள்ள சினோப் என்ற இடத்தில் ஓட்டோமான பேரரசின் படைகளைத் தோற்கடித்தன.
- 1872-உலகின் முதலாவது அனைத்துலக காற்பந்துப் போட்டி கிளாஸ்கோவில் ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் இடம்பெற்றது.
- 1908-பென்சில்வேனியாவில் மரியான்னா என்ற இடத்தில் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 154 பேர் கொல்லப்பட்டனர்.
- 1917-முதலாம் உலகப்போர்: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆர்.ஐயாத்துரை என்ற லான்ஸ் கோப்ரல் போரில் ஈடுபட்டு இறந்தார்.
- 1936-லண்டனில் பளிங்கு அரண்மனை தீயினால் சேதமடைந்தது.
- 1939-சோவியத் படைகள் பின்லாந்தை முற்றுகையிட்டு குண்டுகளை வீசின.
- 1943-இரண்டாம் உலகப்போர்: டெஹ்ரானில் கூடிய அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட், பிரித்தானியத் தலைமை அமைச்சர் வின்ஸ்டன் சேர்ச்சில், ரஷ்ய ஜனாதிபதி ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் ஜூன் 1944 இல் ஐரோப்பாவைத் தாக்கும் தமது திட்டத்தை ஆராய்ந்தனர்.
- 1962-பர்மாவைச் சேர்ந்த யூ தாண்ட் ஐக்கிய நாடுகள் சபையின் 3ஆவது பொதுச் செயலராகத் தெரிவானார்.
- 1966-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து பார்போடஸ் விடுதலை பெற்றது.
- 1967-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து தெற்கு யேமன் விடுதலை பெற்றது.
- 1967-சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தான் மக்கள் கட்சியை ஆரம்பித்தார்.
- 1981-பனிப்போர்: ஜெனீவாவில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சோவியத் பிரதிநிதிகள் ஐரோப்பாவில் நிலைகொண்டுள்ள நடுத்தர ஏவுகணைகளைக் குறைக்க பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர்.
- 1995-வளைகுடாப் போர் முடிவுக்கு வந்தது.

### பிறப்புக்கள்

- 1825-வில்லியம்- அடோல்ஃப் பூகுவேரோ, பிரெஞ்சு ஓவியர் (இ.1905)
- 1835-மார்க் டுவெய்ன், அமெரிக்க எழுத்தாளர் (இ.1910)
- 1858-ஜகதிஷ் சந்திர போஸ், இந்திய முதல் விண்ணலை அறிவியலாளர் (இ.1937)
- 1874-வின்ஸ்டன் சேர்ச்சில், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரும், நோபல் பரிசு பெற்றவரும் (இ.1965)

### இறப்புக்கள்

- 1900-ஆஸ்கார் வைல்டு, ஐரிஸ் நாடகாசிரியர், எழுத்தாளர் (பி.1854)
- 2012-ஐ.கே.குஜரால், இந்தியாவின் 15 ஆவது பிரதமர் (பி.1919)

### வளைகுடாப்போர்

வளைகுடாப்போர் என்பது 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி முதல் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி வரை ஈராக்கிற்கும் அமெரிக்க தலைமையிலான 29 நாடுங்கள் அடங்கிய கூட்டுப்படையினருக்கும் இடையே இடம்பெற்ற சமர் ஆகும். இந்தப் போர் முதலாம் வளைகுடாப் போர் அல்லது பாரசீக வளைகுடாப்போர் அல்லது பாலைவனப் புயல் படை நடவடிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.

ஈராக் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி அன்று குவைத் நாட்டை ஆக்கிரமித்து தன்னுடன் இணைத்துக் கொண்டதை அடுத்து ஈராக்கியப் படைகளை குவைத்திலிருந்து வெளியேற்றும் நோக்கில் ஈராக் குவைத் மற்றும் சவுதிஅரேபியாவின் சில பகுதிகளிலும் போர் மூண்டது. குவைத் மீதான ஆக்கிரமிப்பை அடுத்து உடனடியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை ஈராக் மீது பொருளாதாரத் தடை விதித்தது.

ஈராக்கிற்கு எதிராக அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படை நடத்திய தாக்குதலின் முடிவில் தரைவழித் தாக்குதல் ஆரம்பித்து 100 மணி நேரத்திற்குள் ஈராக் படைகளை விரட்டி கூட்டுப்படை வெற்றிகண்டது.

# விவசாய கல்வியும் அதுசார்ந்த தொழிற்றுறையின் அபிவிருத்தியும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 38-I

வழக்கமான நேர்முகத்தேர்வு இம்முறை உலக வங்கியின் உயர்கல்விக்காக விவசாய பீடத்துக்கான திட்டமொன்றில் பண்ணையில் பணிபுரியும் தொழிலாளிகளுக்கான தேர்வு.

பத்திரிகையில் விளம்பரப்படுத்தியே தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற பணிப்பின் பேரில் விளம்பரப்படுத்தப்பட்டது. தொழிலாளிக்கு அடிப்படைத் தகுதியிலொன்றாக க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி என்பதாகும். இந்தத்தகுதி வழக்கமாக தொழிலாளியொருவருக்கு கேட்கப்படுவதில்லை.

இருப்பினும் திட்ட வரையறையின் போது விதந்துரைக்கப்பட்டதனால் விளம்பரப்படுத்தலில் முக்கியத்துவப்படுத்தப்பட்டது. காலஅவகாசத்தைப் பொறுத்து நேரடியாக நேர்முகத் தேர்வுக்கே வரும்படி அறிவுறுத்தப்பட்டது.

வந்தார்கள், நீண்ட வரிசையாக வந்தார்கள், வந்துகொண்டேயிருந்தார்கள். எதிர்பார்த்திருக்கவில்லை, இப்படியொரு நீண்ட வரிசையை! சொல்ல வந்த செய்தி அதுவல்ல. வந்தவர்களில் பலருக்கு க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த தகுதியில்லை. சித்தியடையத் தவறியவர்களுக்கு நேர்முகத்தேர்வுக்கு அனுமதியில்லை என்றபின்னும் அவர்கள் விடவில்லை.

தூரதேசத்திலிருந்து வந்ததால் நேர்முகத்தேர்வில் கலந்துவிட்டு செல்லவேண்டும் என காத்திருந்து, அன்புக்கட்டளையுமிட்டு உள்ளே வந்தார்கள். பலர் பெண்கள், ஒருவர் கையில் குழந்தையுடனும் வந்திருந்தார். ஆண்கள் பலரும் வந்திருந்தார்கள். வயது 19, 20, 21 இலும் இருந்தார்கள். அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கல்விகற்று க.பொ.த உயர்தரத்திலும் சித்தியெய்திய மாணவர்களும் வந்திருந்தார்கள்.

என்ன செய்வதென நேர்முகத்தேர்வே திகைத்து நின்றது. கிளிநொச்சியின் வட்டக்கச்சி, மலையாளபுரம், அக்கராயன் பகுதி, ஸ்கந்தபுரம், விவேகானந்த நகர், இன்னும் பல இடத்திலிருந்து சாரைசாரையாக ஆண்கள், பெண்கள் என பலர் வந்திருந்தார்கள். குறித்த வேலைக்கு இவ்வளவு வெற்றிடங்களை அன்று கண்டுணர்ந்தோம். பல்கலைக்கழகத்தில் வேலையென்பது தற்போதைக்கு எமது மக்களுக்கு உள்ள அரிய வாய்ப்பாகவே நாம் காணமுடியும்.

எப்படியாவது ஒரு வேலையாவது கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் வந்திருந்த மக்களைக் கண்டு மனம் வெம்பியது. எவ்வளவு சிரமங்களை உள்வாங்கி வாழ்ந்த மக்கள் வேலையொன்றுக்காக அங்கிருந்து இங்கே பலத்த எதிர்பார்ப்புடன் வந்திருக்கின்றார்கள்.


பிறப்பு சான்றிதழ் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் கிழிந்த நிலையில் இன்னும் பழுதடைந்த நிலையில் அவர்கள் கொண்டு வந்ததும் கையில் இதுமட்டும் கிடைத்ததால் ஒருவாறு இவற்றை இப்படியாவது காப்பாற்றிவிட்டேன் என கூறி ஆதங்கப்பட்டதும் மனதை நெருடியது. ஒருவாறு அவர்களை சமாதானப்படுத்தி தேர்வின் விபரத்தை தெரிவித்து அனுப்பிவைத்தோம். இந்த நேர்முகத்தேர்வு, தேர்வுக்கு வந்தவர்களை விட தேர்வினை வைத்தவர்களுக்கு பல வினாக்களைத் தொடுத்திருக்கின்றது. வேலையின்மை என்பது பலவழிகளில் எழுந்து நிற்கின்றது.

பலரும் அங்கலாய்த்து அங்குமிங்குமாக ஓடித்திரிவது தெரிகின்றது. ஆனால் வேலை பெற்றுவிட்டவர்கள் வேலை கிடைத்தவுடன் குறித்த வேலையை செய்ய மறுப்பதும் அதற்கு பல நிர்ப்பந்தங்களை விதிப்பதும் விரும்பத்தகாத நிகழ்வுகளாகும்.

விவசாய கல்விக்கு இப்படி நேர்ந்திருக்கின்றது. க.பொ.த உயர்தரத்தில் விவசாய விஞ்ஞானம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் எனும் பாடகூட்டினினை தெரிவு செய்தவர் மாவட்ட மட்டத்தில் 41ஆவது படிநிலையைப் பெற்றும் பல்கலைக்கழக தேர்வில் வெற்றிபெற முடியவில்லை. அக்கராயன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியரின் முழுமையான உதவியின்றி மாணவர்கள் விவசாய பாடத்தில் சித்தி பெற்றிருக்கின்றார்கள்.

இங்கே சுட்டிக்காட்டப்பட்ட விடயம் யாதெனில் விவசாய கல்வியை கற்பதற்கு போதிய ஆசிரிய வளத்தை வடமாகாணம் கொண்டிருக்கவில்லை என்பதாகும். 1990ஆம ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பீடத்திலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் எங்கே? இப்பட்டதாரிகளில் வடமாகாணத்தில் பணிபுரிபவர்களில் எத்தனை சதவிகிதமானவர்கள் விவசாயஞ்சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள்? பட்டதாரிகளை பாடசாலைகளில் விவசாய விஞ்ஞானம் கற்பிக்கவிடாது தடுத்தது எது? இவர்களில் பலர் விவசாய விஞ்ஞானம் கற்பிக்க இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

கிளிநொச்சியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக நகரமயமாதல் திட்டம்
"கருப்பொருள்: விவசாயத்திலும் தொழில்நுட்பத்திலும் சிறந்து விளங்குதல்"




Source: Mahinda Chintana – Vision for the Future, "Unstoppable Sri Lanka 2020, Public Investment Strategy 2014-2016, Dept of National Planning, Ministry of Planning pp 167-168

இதற்குக் காரணம் அவர்களிடம் வேண்டிய தகுதியில்லையா? அல்லது விவசாய விஞ்ஞான பாடத்தை தரக்குறைவாக காண்பித்து பாடசாலைகளில் கற்பிக்க அனுமதிக்கப்படவில்லையா? விவசாய பட்டதாரிகளை உருவாக்கும் போது விவசாய விஞ்ஞானம் கற்பிப்பதற்கு தகுதியுடையவர்களாக அல்லவோ உருவாக்கினோம். ஆனால் வாய்ப்பிருந்தும் விவசாய விஞ்ஞானம் கற்பிக்கவும் அதுசார்ந்த விவசாய தொழில்நுட்பத்தை கற்பிக்கவும் வழிசெய்து கொடுக்கப்படவில்லை.

இதற்கு காரணமென்ன? வன்னிப்பகுதி பாடசாலைகளில் விவசாய விஞ்ஞானம் கற்க பல மாணவர்கள் முன்வந்தும் அவர்களுக்கு அதனை கற்பதற்கான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என குறைகள் எழுந்துள்ளன.

இந்த வினாக்களுக்கு நியாயமான முறையில் விடைதேடிக்கொண்டிருக்கையில் அனைத்தையும் தாண்டி இன்னொரு வினா தேடியோடி ஓங்கியெழுந்திருக்கின்றது. அதுதான் அண்மையில் அறிமுகமாக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பாடத்திட்டம். அதில் உயிரியல்முறைமை தொழில்நுட்பம் எனும் பாடம் முழுக்க முழுக்க விவசாய விஞ்ஞானத்தை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதனை முழுமையாக திறமையாக கற்பிப்பதற்கான ஆசிரிய வளம் தயார்படுத்தப்படவில்லை. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் இன்னும் கல்வியதிகாரிகள் அனைவரும் குழம்பிப்போயிருக்கின்றார்கள். எங்கோ பாரிய தவறு நடந்திருக்கின்றது. பாடத்திட்டம் விரைந்து நடைமுறைப்படுத்தப் பட்ட அவசரத்தில் ஆசிரியர்களை தயார்ப் படுத்தாது அதனை சிறப்பாக கற்பிக்க முனைந்தது நல்லமுடிவாக இல்லை. ஆசிரியர்களுக்கு வழக்கமாக வழங்கப்பட்ட வேலைப் பளுவிற்கும் மேலாக புதிய பாடத்திட்டத்தை கற்பிக்க தற்போது உள்ள ஆசிரிய வளம் தயார்செய்யப்படவில்லை. மாணவர்களில் பலர் விவசாய விஞ்ஞானத்தை கற்க விருப்பமிருந்தும் கற்பிக்க வழிசெய்து கொடுக்கப்படவில்லை. இதுதான் யதார்த்தம். இதற்கு அனைவரும் பொறுப்பானவர்களாவர். இது குறைகண்டு பிடிப்பதற்கான இடமல்ல. குறைகளை நாமே கண்டுபிடித்து அதனை அனைவரும் இணைந்து நிவர்த்தி செய்வதற்காகவாகும்.

விவசாய விஞ்ஞான கற்கைநெறியை கற்க விரும்பும் மாணவர்களை வடபுலமெங்கும் அதிகரிக்க வேண்டும். இப் பாடத்திட்டத்தை குறிப்பிட்ட பாடசாலைகளில் கற்பிக்க விரைந்து ஆவனசெய்ய வேண்டும். விவசாய விஞ்ஞான பாடத்தினை கற்க ஆர்வமுடைய மாணவர்கள் பலரிருந்தும் குறிப்பிட்ட பாடம் கற்பிக்கப்படவில்லை என்றால் அதற்கான அடிப்படைப் பிரச்சனையை இனங்கண்டு தீர்வு காணப்படவேண்டும். விவசாய பீடம் வெறுமனே விவசாய விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது என்பதற்கும் மேலாக வடமாகாணத்தில் பணிபுரிய விவசாய விஞ்ஞான ஆசிரியர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதனை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இப்பீடத்திலிருந்து வெளியேறிய அனைவரும் விளக்கமாக விவசாய விஞ்ஞானத்தை கற்பிக்க தகுதியுள்ளவர்கள். அவர்களுக்கான மேலதிக பயிற்சிகளை விவசாய பீடம் தொடர்ந்து வழங்கும். எமது பட்டதாரிகள் இப்பீடத்தின் ஓரங்கமாகும். பீடத்தின் வளர்ச்சியிலும் அவர்களுக்கு கணிசமான பங்களிப்பு உண்டு. தகுதி மற்றும் திறன்கள் உள்ள பட்டதாரிகளை உள்வாங்கி அவர்களுக்கு தேவையான உள்ளக பயிற்சியை வழங்கினால் ஆசிரிய வளம் ஓங்கும். பலபாடசாலைகளில் விவசாய விஞ்ஞானத்தை கற்பிக்கும் நிலைவரும். க.பொ.த உயர்தரத்தில் ஒரு பாடமாக விவசாய விஞ்ஞானத்தை கற்க வசதிசெய்து கொடுத்திருந்தால் மாணவர்கள் பலர் உடனிணைந்திருப்பார்கள். மாணவர்களிடமிருந்த ஆர்வத்தை சரிவர உள்வாங்கியிருக்க முடியும்.

இந்த வரலாற்றுத் தவறை இனியும் நாம் செய்ய முனைவது எமது பிரதேச கல்விக்கு அடிக்கும் சாவுமணியாகும். நாமே இதற்கு உடந்தையாக இருக்கக்கூடாது. விவசாய விஞ்ஞானத்தை விவசாய பீடத்தின் அனைத்து வளங்களையும் முடுக்கிவிட்டு நாம் முன்னேற்றவேண்டும். விவசாய பீடமும் கல்வித்திணைக்களமும் இணைந்து இதற்கொரு வழிகாணலாம். விவசாய விஞ்ஞானத்தின் பலத்தை நாம் மேலும் மெருகூட்டினால் அதற்கான தொழில்நுட்ப அறிவை உள்வாங்கினால் இன்னும் அது பலம்பெறும். மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது 2014-2016 ஆண்டுகளுக்கான மகிந்த சிந்தனையின் திட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் கிளிநொச்சியை மையப்படுத்திய விவசாய அபிவிருத்திக்காக நிதிஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. கிளிநொச்சியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக நகரதிட்டம் உள்வாங்கப்பட்டுள்ளது.

இதற்காக 2ஆயிரத்து 270 மில்லியன் ரூபாய்கள் தேவையென அளவிடப்பட்டுள்ளது. கிளிநொச்சியை வடபகுதியின் சிறந்த நகரமாக்கி அதில் விவசாயம் மற்றும் தொழில்நுட்பகல்விசார் நடவடிக்கைகளை மேன்மைப்படுத்துவதை நோக்கமாக கொண்டு செயற்றிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் விவசாய பீடம் 2014 ஜனவரியில் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றப்படுவதும், பொறியியல் பீடம் புதிதாக ஆரம்பிக்கப்படுவதும் மற்றும் விளையாட்டு விஞ்ஞான அலகினை தற்சமயம் விவசாய பீடத்தினுள் இணையலகாக உள்வாங்கியதால் அதனை தனித்த பீடமாக கிளிநொச்சியில் உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுக்கும் மேலாக கிளிநொச்சியிலிருந்து அனைத்து மாவட்டங்களையும் இணைக்கும் இணைமையங்கள் [Satellite Centers] அந்தந்த மாவட்டங்களில் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் நூறு வருடங்களுக்கான திட்டங் களாக இவற்றை இனங்கண்டு செயலில் இறங்கியிருக்கின்றோம். விவசாய பீடத்தின் வளர்ச்சி இனி பலபடிகளைத் தாண்டி உயர்வு ற்று செல்லும் இந்நாட்களில் எங்களூர் விவசாயிகளுக்கான தொழில்நுட்பங்கள், அவர்களின் பயிர்ச்செய்கை பிரச்சினைகள் அனைத்தையும் உள்வாங்கி அவர்களுக்கு ஆறுதல் தந்து பரிந்துரைகளையும் செய்யும் வகை யில் திட்டங்களை தீட்டியிருக்கின்றோம்.

அனைவரும் இணைந்ததே அபிவிருத்தி. இதில் அனைத்து கைகளும் ஒன்றிணைந்து பேதங்களையும் பாகுபாடுகளையும் தவிர்த்து நொந்துபோயிருக்கின்ற எம்மினிய உறவுகளுக்கு அவர்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் புதிய தொழிற்றுறைகளை பெருக்கி தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் நாம் முன்னிற்போம் வாருங்கள். இனியொரு பசுமைப்புரட்சி அனை வரையும் உள்ளடக்கிய செயலமைப்புக் குள்ளாலேயே பயணிக்க வேண்டும். இதற்கு உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்.

# மனித உரிமை மீறல்கள் ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்கு செலுத்துமா...?

எந்தவொரு நாடும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடும்போது அவற்றை நியாயப்படுத்துவதற்காக மற்றைய நாடுகளில் இடம்பெறும் மீறல்களை சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றது. அல்லது பூகோள மூலோபாய பேரம் பேசலில் ஈடுபடுகின்றது என்பதே உண்மையாகும்.

மனித உரிமைகள் என்பது எப்போதும் வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் போட்டியிடுகின்ற ஒன்றாகக் காணப்படுகிறது. மனித உரிமைகள் என்பது வெளியுறவுக் கொள்கையில் செல்வாக்குச் செலுத்தக்கூடாது என மூலோபாய வல்லுநர்கள் அறிவுறுத்துகின்றனர்.

உலக நாடுகள் தமது நாடுகளின் நலன்கள் மற்றும் அதிகாரங்களை மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என மூலோபாய வல்லுநர்கள் நம்புகின்றனர். இது உண்மையில் தவறான கருத்தாகும். நாடுகள் கொண்டுள்ள நலன்களுக்கு அப்பால், ஒரு நாட்டின் அதிகாரமானது சட்டத்தின் வழி இயங்குவதற்கான நெறிமுறைகளை கொண்டிருக்க வேண்டும். இதற்காக, குறித்த நாடானது மனித உரிமைகளில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அண்மையில் இலங்கையால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களைக் கருத்திற் கொண்டு இலங்கையில் இடம்பெற்ற பொது நலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடாது என இந்தியப் பிரதமருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. இதனால் இந்திய அரசாங்கமானது, இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தனது நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரை அனுப்புவதென ஒரு மென்மையான தீர்மானத்தை எடுத்தது. ஆகவே, வெளியுறவுக்கொள்கையுடன் மனித உரிமைகள் கொண்டுள்ள உறவு எத்தகையது?

தமது நாடுகளின் இறையாண்மை தனித்துவமானது எனவும், பிரிக்கப்பட முடியாதது எனவும் தமது நாட்டிற்குள் என்ன நடந்தாலும் அது தொடர்பாக வெளித்தரப்பினராலும் கேள்வி கேட்கப்படக் கூடாது எனவும் உலக அரசுகளும் அவற்றை ஆள்பவர்களும் கருதுகிறார்கள். எடுத்துக்காட்டாக, இலங்கையானது தனது நாட்டில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட போர் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எந்தவொரு நாடுகளும் குறிப்பாக இந்தியா தன்னிடம் கேள்வி கேட்கக் கூடாது என இலங்கை தற்போது நினைக்கிறது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தம்மிடம் வினவுவதானது தமது தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக உலக நாடுகள் கருதுகின்றன. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமானது அச்சுறுத்தல் மற்றும் பிரிவினைகளிலிருந்து தனது நாட்டைப் பாதுகாப்பதற்காக மிகவும் மோசமான வன்முறைகளைப் பயன்படுத்த முடியுமா என்பதே இங்குள்ள விவாதமாகும்.

உலக நாடுகள் தமது நாடுகளின் இறைமையைப் பாதுகாப்பதற்காக மனித உரிமைகளை மறந்துவிட வேண்டுமா? தாம் விரும்பியவாறு தமது சொந்த மக்கள் மீது நாடுகள் வன்முறைகளை கட்டவிழ்த்துவிட முடியுமா? இந்த இடத்தில் மனித உரிமைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றன தொடர்பான விவாதம் எழுகின்றது.

ஜேர்மனியை ஹிட்லர் ஆண்ட போது யூத மக்கள் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டமையானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக கருதப்பட்ட பின்னரே மனித உரிமைகள் தொடர்பான எண்ணக்கரு பரந்தளவில் நோக்கப்பட்டது.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்து உலக நாடுகளில் பல்வேறு துன்பியல் சம்பவங்கள் ஏற்பட்டபோது இவ்வாறான இனப்படுகொலை இனியொருபோதும் இந்தப் பிரபஞ்சத்தில் நடந்தேறக்கூடாது எனச் சுட்டிக்காட்டப்பட்டு சிவில் உரிமைகள் தொடர்பான அனைத்துலகப் பிரகடனம் ஐ.நா. சாசனத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என உலக சக்திகளால் முன்மொழியப்பட்டது. இதிலிருந்து மனித உரிமைகள் அமைப்புக்கள் அதிகம் தோற்றம் பெற்றதுடன் மனித உரிமைகள் தொடர்பான எண்ணக்கருக்கள் அதிகரித்தன.

வெவ்வேறு உலக நாடுகள் தமது நலன் கருதியும் கேந்திர மூலோபாய நலன்களையும் அடைந்து கொள்வதற்காக ஏனைய நாடுகளின் விவகாரங்களில் தலையீடு செய்து குறித்த நாட்டின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகக் கேள்வியெழுப்புகின்றபோது மனித உரிமைகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை போன்றவற்றின் வரையறைகள் தொடர்பில் பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன.

எடுத்துக் காட்டாக வியட்நாமைப் பாதுகாத்தல் என்கின்ற எண்ணக்கருவின் கீழ் இந்திய- சீன யுத்தம் இடம்பெற்ற போது அதில் அமெரிக்கா தலையீடு செய்தது. இதில் பல ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இரண்டாவதாக சில நாடுகளில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களை உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் கவனத்திற் கொள்ளாத அதேவேளையில் சில நாடுகளில் இடம்பெறும் மீறல்களைச் சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாக சிரியா மற்றும் ஈரானில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றன கேள்வியெழுப்பிய அதே வேளையில் இவற்றின் கூட்டணி நாடுகளான சவுதிஅரேபியா, இஸ்ரேல் மற்றும் பாகிஸ்தான் போன்றவற்றில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் பெண்கள் உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றன கவனத்திற் கொள்ளவில்லை.

இவ்வாறான எடுத்துக் காட்டுக்களின் மூலம் உலகின் சக்தி மிக்க நாடுகளும் அமைப்புக்களும் மற்றைய நாடுகளின் மனித உரிமை மீறல் விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தும்போது அரசியல் முதன்மைப்படுத்தப்படுகின்றது. அதாவது நாடுகளின் மனித உரிமை விவகாரங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பதை இங்கு வரையறைத்துக் கொள்வதுடன் நியாயப்படுத்திக் கொள்ளவும் முடியும்.



The New Indian Express ஊடகத்தில் Anuradha M chenoy எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளமை...

எந்தவொரு நாடும் மனித மீறல்களில் ஈடுபடும்போது அவற்றை நியாயப்படுத்துவதற்காக மற்றைய நாடுகளில் இடம்பெறும் மீறல்களைச் சுட்டிக்காட்ட முயற்சிக்கின்றது அல்லது பூகோள மூலோபாய பேரம் பேசலில் ஈடுபடுகின்றது என்பதே உண்மையாகும்.

எடுத்துக்காட்டாக, 1994-96 காலப்பகுதியில் செச்சினியாவில் பிரிவினைவாத அமைப்பொன்று உள்நாட்டுப் போருக்கான சூழலை உருவாக்கியபோது ரஷ்யாவானது செச்சினியா மீது மிகப்பெரிய விமானக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது. இந்தச் சம்பவமானது ரஷ்யா மனித உரிமை மீறல்களைப் புரிந்துவிட்டதை உறுதிப்படுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியன மிகவும் கடுமையாக விமர்சித்தன. ஆனால், அதற்குப் பின்னர், அமெரிக்காவானது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை ஆரம்பித்தபோது ஆப்கானில் போரை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவுக்கு ரஷ்யா மற்றும் மத்திய ஆசிய நாடுகளின் ஆதரவு தேவைப்பட்டது. இந்த விடயத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் சமரசம் செய்துகொண்டதால் செச்சினியாவில் ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அமெரிக்கா கேள்வியெழுப்பாது நழுவியது.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கு எதராக அவர்களது சொந்த நாட்டு அரசாங்கம் குற்றச்சாட்டுக்களுக்களை முன்வைக்கின்றன. இந்தியாகூட தனது நாட்டில் செயற்படும் மனித உரிமையாளர்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விளைவிப்பதாக குற்றம் சாட்டியுள்ளது. வாழ்வதற்கான உரிமை, விடுதலை, கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கான உரிமை, நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை மற்றும் ஏனைய எல்லா விதமான அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகள்தான். இதனால் இந்திய அரசும் இதன் சட்டங்களுக்குக் கட்டுப்படுபவர்களும் மனித உரிமைகளை மதிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

சில சம்பவங்களின்போது இந்தியா மனித உரிமை மீறல்களை மீறியுள்ளதற்கான சாட்சிங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இந்தியா-பாதிக்கப்பட்ட நாடுகளில் பல்வேறு மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளது. இந்தியர்களாகிய நாம் வேற்று நாட்டவர்கள் எமது நாட்டில் இடம்பெறும் மீறல்கள் தொடர்பாகக் கேள்வி கேட்பதை விரும்பவில்லை. அதாவது தொடர்ந்தும் தனது நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மறைத்துவருகின்றது.

இந்நிலையில் இந்தியா, மற்றைய நாடுகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எவ்வாறு கேள்வி கேட்க முடியும்? இந்தியாவானது இலங்கையில் பெருமளவில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் அங்கு இடம்பெற்ற போர்க்கால மீறல்கள் தொடர்பில் பதிலளிக்குமாறு இலங்கை அரசாங்கம் மீது ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை?

மற்றைய நாட்டின் மனித உரிமை மீறலைத் திருத்துவதற்காக இந்தியா, தனது வெளியுறவுக் கொள்கையைக் கருதாது, வெளிப்படையாக அழுத்தம் கொடுத்தால் அது வரவேற்கத்தக்க விடயமாகும். இதன்மூலம் இந்த உலகம் பாதுகாப்பாக இருக்க முடியும். தமது சொந்த மக்கள் மீது அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் இனப்படுகொலையை மேற்கொள்வதை நிறுத்தி, தனது நாட்டில் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்து, ஆரோக்கியமான நிறுவகங்களை அமைத்து இவ்வாறான உரிமைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சுயாதீன நீதிச்சேவையை உருவாக்கினால் அனைத்துலகமும் பாதுகாப்பாகவும் சட்டத்திற்கு கட்டுப்படுவதாகவும் இருக்கும்.

இதில் இந்தியா நம்பிக்கை கொண்டால் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ஏன் உறுதிமிக்கதாக இருக்க முடியாது? இதேவேளையில் பூகோள மூலோபாய நலன்களை அடைந்துகொள்வதற்காக மனித உரிமைகளைப் பயன்படுத்துபவர்களை விமர்சிப்பதற்கு இந்தியா தயக்கம் கொள்ளக்கூடாது. இதற்கும் அப்பால், ஏனைய நாடுகளில் வாழும் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறு ஜனநாயக நாடுகளில் வாழும் மக்களால் அழுத்தம் கொடுக்க முடியும்.

ஒரு நாட்டின் வெளியுறவுக்கொள்கையென்பது அதன் கொள்கை வகுப்பாளர்களால் தெரிவு செய்யப்பட்ட மிகவும் வரையறுக்கப்பட்ட விடயங்களை மட்டுமே பிரதிபலிப்பதாக அமைந்திருக்கும். இந்தியாவானது தனது அயல்நாடுகளுடன் எவ்வாறான உறவைப் பேண வேண்டும் என்பதை உயர்மட்ட கொள்கை வகுப்பாளர்கள் கூற முடியும். இதனை இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் மனித உரிமைகள், பொதுவான அபிவிருத்திகள், தேசிய பாதுகாப்பு போன்ற விடயங்களுடன் ஒப்பிட்டு அவற்றை சமநிலைப்படுத்தி கொள்கைகளை வகுக்க வேண்டும். கொள்கை வகுப்பாளர்கள் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன வெளியுறவுக் கொள்கையில் மனித உரிமைகள் என்பது தாக்கம் செலுத்துகிறது என்பதையே அண்மைய கடந்தகால சம்பவங்கள் சுட்டிநின்கின்றன.

(நித்தியபாரதி)

# கற்பிட்டி பிரதேசத்தின் தீவுகளை நாம் விற்பனை செய்யவில்லை

## நிரூபித்தால் பதவி விலகுவேன்



(கற்பிட்டி)

கற்பிட்டி பிரதேசத்திலுள்ள 13 தீவுகளை அரசாங்கம் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துள்ளதாக ஐ.தே.க.வின் கபீர் ஹாஷிம் எம்.பி. கூறிய குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.


இங்குள்ள ஒரு தீவையேனும் வெளிநாட்டிற்கு அரசாங்கம் விற்றது என்பதை கபீர் ஹாஷிம் இந்த சபையில் ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தும் பட்சத்தில் தனது அமைச்சு பதவி மட்டுமன்றி உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகத் தயார் என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன சவால் விடுத்தார்.

வரவு செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான ஆறாவது நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், அரசாங்கம் எந்த ஒரு தீவையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவில்லை என்பதை பொறுப்புடன் கூறிக் கொள்வதாக தெரிவித்த அமைச்சர் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதும், பொய்யானதுமான தகவல்களை கபீர் ஹாஷிம் எம்.பி. கூறி இந்த உயர் சபையை தவறாக வழி நடத்துவதாகவும் குற்றம் சாட்டினார்.

பொய் கூறுவது என்பது ஒரு பாவமான செயல், காரியம் என்று புனித அல்குர்ஆனிலேயே கூறப்பட்டுள்ளது.

வத்தலங்குண்டு பிரதேசத்திலுள்ள தீவு வெளிநாட்டுக்கு விற்பனை செய்துள்ளதாக கூறி மீனவர்களை குழப்பம் அடைய செய்யும் முயற்சியில் அவர் இந்த உரையை நிகழ்த் தியுள்ளார் என்றார்.(அ-2)



பொலிகையூர் சு.க.சிந்துதாசனின் "கடலின் இறுதி அலை" எனும் கவிதை தொகுப்பு வெளியீட்டு விழா அண்மையில் பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றபோது...

# நம் நாட்டின் அபிவிருத்தி கண்ட பொதுநலவாய தலைவர்களே!

## இலங்கைக்கு நட்புக்கரம் நீட்டுங்கள்



(கொழும்பு)

**இலங்கை குறித்த தவறான பிரசாரங்களை நீக்க எமது நாடு பற்றிய உண்மை நிலைமையை சர்வதேச சமூகத்திற்கு உணரவைக்க முடிந்தமை பொதுநலவாய மாநாட்டின் மூலம் இலங்கைக்குக் கிடைத்த பெருவெற்றியாகும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

வரவு செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான 6ஆறாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பொதுநலவாய மாநாட்டின் மூலம் இலங்கைக்கு என்ன நன்மை கிடைத்தது என்று கேட்பவர்களுக்கு தக்க பதில் இருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், 30 வருட யுத்தத்தின் ஊடாக உருவான பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட்டது குறித்து வடபகுதி சென்ற வெளிநாட்டுத் தலைவர்கள் நேரில் கண்டதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் யதார்த்தபூர்வமான நிலைமையை உலகுக்கு எடுத்துரைப்பதற்கே எமது வெளிநாட்டுக் கொள்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது குறித்து கட்சி பேதமின்றி இலங்கையர் என்ற வகையில் அனைவரும் பெருமையடைய முடியும்.இந்த மாநாடு நாட்டின் எதிர காலத்துக்கு சிறந்த முன்மாதிரி என அரச தலைவர்கள் பலரும் சுட்டிககாட்டினர். இலங்கையில் யுத்தத்தின் பின்னரான அபிவிருத்தி குறித்து அவர்கள் பாராட்டுத் தெரிவித்தனர். உலகில் உள்ள முக்கிய தலைவர்கள் தெரிவித்த இந்தக் கருத்துக்கள் குறித்து இலங்கை மகள் பெருமையடைய முடியும்.

இங்கு வந்த அரச தலைவர்களில் 20 பேர் முதற்தடவையாகவே இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இம்மாநாட்டிற்கு முன்னர் இலங்கை தொடர்பில் திட்டமிட்ட முறையில் தவறான பிரசாரங்கள், குற்றச்சாட்டுகள் என்பன பரப்பப்பட்டிருந்தன. ஆனால் தாம் இங்கு வந்த பின்னர் தாம் கேட்டவற்றுக்கும் இங்கு நேரில் காண்பவற்றுக்குமிடையில் வானுக்கும் மண்ணுக்கும் உள்ள வித்தியாசம் காணப்பட்டதாகவும் வெளிநாட்டு தலைவர்கள் விபரித்தனர்.

அழிவடைந்த நாடொன்றையே எதிர்பார்த்து வந்த நாங்கள் இங்கு பாரிய அபிவிருத்தியைக் கண்டதாக அவர்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

இளைஞர்கள் தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஏனையோருக்கு முன்மாதிரியானது என்று பாராட்டினார்.

மாநாட்டிற்கு செலவான செலவு குறித்து பேசுபவர்கள் முதலில் அவுஸ்திரேலியா எமக்கு அன்பளிப்புச் செய்த இரு கப்பல்களினதும் பெறுமதி பற்றித் தேடிப் பார்க்கட்டும். எமது கடற்படை ஆழ்கடலில் செய்யும் பெரும் சேவைக்காகவே இந்த அன்பளிப்பு கிடைத்தது.

பொதுநலவாய மாநாட்டிற்கு 10 நாட்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இந்து சமுத்திர மாநாட்டில் அம்பாந்தோட்டை சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி வழங்க விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

பயங்கரவாதத்தினால் பாதிக்கபட்டு மீண்டு எழும் நாட்டை இவ்வாறு நடத்தக் கூடாது எனவும் சர்வதேச சமூகம் இலங்கைக்கு நட்புக் கரங்களை நீட்ட வேண்டும் எனவும் அரச தலைவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருந்தனர்.

வெளிநாட்டு தலைவர்கள் திறந்த மனதுடன் நியாயமாக தமது நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தனர். வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள பாரிய அபிவிருத்தியை அவர்கள் கண்டனர்.

52 நாடுகளில் 33 நாட்டு ஜனாதிபதிமார், உப ஜனாதிபதிமார், பிரதமர்கள் மற்றும் அரசர்கள் இதில் பங்குபற்றினர்.

இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் பயன் முழு தென்னாசியாவுக்கும் கிடைத்துள்ளது. சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் நபர்களை கடற்படையினர் தடுத்து வருகின்றனர். இதுவரை 4 ஆயிரம் பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். (அ-2)

# எதிர்க்கட்சி தலைவரின் அறைக்குள் பாம்பு

## விசாரணை கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்திற்குள் பாம்பொன்று காணப்பட்டது தொடர்பில் எதிர்காலத்தில் கட்சித் தலைமைத்துவத்துக்கு வரவுள்ள நபர்கள் தொடர்பில் ஐ. தே.கவிற்கு சந்தேகம் காணப்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஊறு விளைவிக்க வேண்டிய அவசியம் தமக்கில்லை என்று தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் பாம்பு ஒன்று உயிருடன் மீட்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சியின் தரப்பில் அரசாங்கம் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டை மஹிந்த அமரவீர மறுத்துள்ளார். எனினும் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பதவி போட்டிகள் இந்த பாம்பு விடயத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் இருந்து விரியன் பாம்பொன்று கண்டுபிடிக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்துமாறு ஐ.தே.க சபாநாயகரிடம் கோரியுள்ளது.

ஆனால் கட்சியின் தலைமைபடத்துக்கு வர ஆசைப்படுபவர்களே பாம்பை இட்டதாக சந்தேகிப்பதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எமக்கு எதிர்க்கட்சி தலைவருக்கு அநியாயம் செய்ய எந்த தேவையும் கிடையாது என்றார்.

சஜித் பிரேமதாசவை சுட்டிக் காட்டிய அமைச்சர் உங்களைப் பற்றித் தான் கட்சிக்கு சந்தேகம் உள்ளது. அண்மையில் காட்டுப் பக்கம் சென்றாரா என வினவினார்.(அ-2)

## நூல் அறிமுகமும் குறும்பட வெளியீடும்

க.இகமலநாதன்எழுதிய "முதுசொம்" நாடக நூல் அறிமுகவிழாவும் "கூலி" குறும்பட வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய், யாழ்ப்பாணம் தேசிய கல் வியியல் கல்லூரியில், இக்கல்லூரி யின் பீடாபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலு வல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தலைவரும் சட்டத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி த.கலாமணி, நாடகத்தின் ஆய்வுரையினை சாவகச்சேரி யா/டிறிபேக் கல்லூரியின் ஆசிரியர் ச.மார்க்கண்டு ஆகியோர் ஆற்று வர்.

குறும்படத்திற்கான ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையின் விரிவுரையாளர் ச.லலீசன் நிகழ்த்த நூலின் முதற் பிரதியை கல்விக்காருண்யன்ஈ.எஸ்.பி. நாகரட்ணம் பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ)

# தேர்தல்களை நடத்துவதற்கு 2035 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

(கொழும்பு)

அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தல்களுக்காக 2ஆயிரத்து 35 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் நடைபெற வுள்ள தேர்தல்களுக்காக வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தேர்தல்கள் திணைகளத்திற்கு 2 ஆயிரத்து 35 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேல், தென் மற்றும் ஊவா மாகாணங்களின் தேர்தல்கள் அடுத்த வருடம் மூன்று கட்டங்களாக நடத்தப்படவுள்ளது.

அத்துடன் பதவிக்காலம் முடிவடைந்துள்ள சில உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களும் அடுத்த வருடம் நடத்தப்பட உள்ளன.

தேசிய ரீதியான தேர்தல் ஒன்றை நடத்த வேண்டுமானால் 230 கோடி ரூபா தேவைப்படும்.

அப்படியான தேர்தல் ஒன்று திடீரென நடத்தப்பட்டால் அந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அதற்கான நிதியை ஒதுக்கும் எனவும் தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.(அ-2)

# General Certificate of Education Ordinary Level 2013 (December) model Exam Paper / Western Province

## English Language - Paper 1

**Answer All Question**

**Test 1**

Here are two pages from Mala's diary. Select the correct word from the boxes and fill in the blanks.

**One is done for you.**

(a) weather
(b) whether

*Sunday*
Today is a rainy day.
1. Weather is bad.

*Thursday*
I went to the hospital to 4._______ my aunt. She is much better now.

(g) sea
(h) see

(c) weak
(d) week

*Monday*
Samitha returned the book given to her last 2._______ .

*Friday*
I went to School and meet the 5._______. On the way to the canteen.

(i) principle
(j) principal

(e) there
(f) their

*Wednesday*
On my way home I visited my grandma, but no one was 3._______ .

*Saturday*
I played with kitty. It 6._______ a mouse.

(k) court
(l) caught

**(5 marks)**

**Test 2**

Fill in the blanks using **has,have or had.** You may use a word more than once.


**The first one is done for you.**

Do you (1) have a pet? Yes, I (2) ________ a pet. Can you guess who he is? He (3) _______ four legs and a tail. He is a little puppy. We play every morning and (4) _______ our breakfast together. A few years ago I (5) ________ my breakfast alone but now he is with me. I have a problem now. Can you remember the poem "Mary had a little lamb..."? Like mary's lamb if my pet also tries to go to school with me, I will (6) _______ to face a lot of troubles.

**(5 marks)**

**Test 3**

Look at the following picture and write 5 sentances describing it.



1. ......................................................................................
2. ......................................................................................
3. ......................................................................................
4. ......................................................................................
5. ......................................................................................

**(5 marks)**

**Test 4**

Cage 'A' gives information on office bearers elected to the Writers' Association of Gampaha District. Cage 'B' shows what happened at the annual general meeting. Read and select the correct answer from cage 'B' and write the correct letter in the given blanks.

**The first one is done for you.**

**A**

***Gampaha District Writers' Association***

| | |
|---|---|
| Patron | : Premalal Perera |
| Chairman | : Ranil de Silva |
| Chief Secretary | : Kasun Ranaweera |
| Treasurer | : Vipula Vithana |
| Auditor | : Paul Jayawickrama |
| Committee | : Ranjith Uduwana, Nimal Managa, Indika Ruwanmali, Yashomi Kaha wala and Siri Hewapathirana |

**B**

(a) advised the members
(b) read the minutes
(c) presided the meeting
(d) elect to the committee
(e) forwarded the finance report
(f) checked the accounts

1. Mr.Ranil de Silva ___(c)___
2. Mr.Kasun Ranaweera ________ of the previous meeting.
3. Mr.Premalal Perera ________ on future activities of the association.
4. Mr.Paul Jayawickrama ________ of the Writer's Association.
5. Mr.Vipula Vithana ________ of the book fair held last month.
6. Mr.Ranjith Uduwana, Mr.Nimal Managa, Ms.Indika Ruwanmali, Ms.Yashomi Kahawala and Mr.Siri Hewapathirana were ________.

**(5 marks)**

**Test 5**

Complete the dialogue with the information given in the programme.

**English Day Programme - 2013**
**Ranmal Vidyalaya**

| | |
|---|---|
| 9.00am | - Lighting the traditional oil lamp |
| 9.10am | - Welcome Speech - the principal of the school |
| 9.30am | - Welcome Song - Students of Grade 7 |
| 9.40am | - Drama - Students of Grade 10 |
| 10.00am | - Group Song - Students of Grade 6 |
| 10.10am | - Speech - Kamal Mendis |
| 10.20am | - Tea break |
| 10.50am | - Mime - Piyal Karunathilaka |
| 11.00am | - Quiz Competition - Students of Grade 8 & 9 |
| 11.45am | - Speech by the Chief Guest |
| 12.00 noon | - Vote of Thanks - Secretary of the English Literary Association |
| 12.15pm | - National Anthem |

Piumi: At what time does the programme begin?
Mali: At......................................................................
Piumi: Then we have to be seated before 9.00 a.m.
Mali: Ofcourse. When ......................................................
Piumi: At half past nine.
Mali: How about the drama? What time does it start?
Piumi:........................................................................
Mali: What is the duration of it?
Piumi:........................................................................
Mali: By the way, who delivers the Vote of Thanks?
Piumi:........................................................................

**(5 marks)**

**Test 6**

Write a paragraph on one of the following. Use about 50 words.

1. Gradening Promotes good health
2. I look after my pet dog well

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**(5 marks)**

**Test 7**

Read the following paragraph answer the questions.

Yala West (Ruhuna) National Parks is well recognized as one of the best parks in the world to observe and photograph leopards. The park covers an area of over 100,000 hectares and is divided into five blocks. block one is the most visited area since it contains the highest density of leopards. however, other areas of Yala such as Yala East had been closed to visitors for some years; as a result it will take time to research leopard numbers in these areas. yala West consists of scrub jungles, brackish lagoons and stunning rock monoliths scattered throughout the park and its eastern edge is bounded by the South East coast.

What is the paragraph about?.......................................................
What is the size of the park?.......................................................
How many blocks are there?.......................................................
Which block contains the most number of leopards?..........................
Why will it take time to research leopard number in Yala East?...............

**(5 marks)**

**Test 8**

Your class is expected to present a drama for the school concert. Write a note to one of your friend informing him/her about it. Use about 50 words.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**(5 marks)**

## உள்விவகாரப் பிரச்சினைகளை இலங்கை தீர்த்துக்கொள்ளும் சீனா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை உள்விவகாரங்களில் வெளிசக்திகள் தலையீடு செய்யக் கூடாது என சீனா அறிவித்துள்ளது. இலங்கை அரசாங்கமும், அதன் மக்களும் உள்விவகாரப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளக் கூடிய ஆற்றலும் வல்லமையும் கொண்டவர்கள் என சீனா சுட்டிக்காட் டியுள்ளது. சர்வதேச சமூகத்தின் அழுத்தங் கள் நிலைமைகளை மோசமடையச் செய்யும் என தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் உரிமைகளுக்கு சர்வதேச சமூகம் மதிப்பளிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.மனித உரிமை மேம்பாடு தொடர்பில் இலங்கை மக்கள் தீர்மானத்தை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளது.

பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் மனிதவுரிமை விவகாரங்களை உலக நாடுகள் அணுகவேண்டுமென சீனா சுட்டிக் காட்டியுள்ளது.

நாட்டின் உள்விவகாரங்களில் சர்வதேச சமூகம் அரசியல் நோக்கத்திற்காக்வோ அல்லது இரட்டை நிலைப்பாட்டுடனோ தலையீடு செய்வதை ஏற்க முடியாது என தெரிவித்துள்ளது.

மனித உரிமை விவகாரத்தை ஓர் கருவியாகப் பயன்படுத்தி நாடுகளின் உள் விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடாது என குறிப்பிட்டுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை தீவிர முனைப்பு காட்டி வருவதாகவும் இதனை வரவேற்க வேண்டுமெனவும் சீனா தெரிவித்துள்ளது. (அ-4-2)

## தற்கொலை தாக்குதல் குறித்து மனம் திறந்தார் பொன்சேகா

(கொழும்பு)

இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்ற போது நான் சுமார் 5 நிமிடங்கள் வரை வாகனத்துக்குள்ளேயே கதவை இறுகப் பிடித்துக்கொண்டிருந்தேன். பின்னர அங்கிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் என்னை அம்புலன்ஸ் வண்டியொன்றில் ஏற்றி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம், கொழும்பிலுள்ள இராணுவ தலைமையக த்துக்குள் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சாட்சியமளித்த போது குண்டுவெடித்த பின்னர் தான் 5 நிமிடங்கள் வரை வாகனத்தின் கதவை பிடித்துக்கொண்டிருந்ததாகவும் பின்னர் ஒரு இராணுவ அதிகாரி தன்னை அம்புலன்சில் ஏற்றி தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் கூறினார்.

இராணுவ தலைமையகத்திலிருந்து பாதுகாப்பு தொடரணியுடன் புறப்பட்டு வந்த போது வாசலில் நின்ற கூட்டத்தினிடையே நீல நிற சல்வார் அணிந்த ஒரு பெண்ணை கண்டதாக சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இவரது கார் இந்த பெண்னை 2 மீற்றர் அளவில் நெருங்கியபோது அந்த பெண் நின்ற பக்கத்தில் தீச்சுவாலை எழும்பியதாகவும் சாரதி முன்னே சரிந்து கிடந்ததாகவும் தனதருகில் இருந்த இரண்டு காவலர்களும் நிலத்தில் கிடப்பதை கண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.தான் 5 நிமிடங்களுக்கு மேலாக கதவைப் பிடித்துக்கொண்டு உதவியை எதிர்பார்த்து இருந்ததாக கூறினார்.

எதிராளிகளான கிருபாகரன், சூரியகுமார், பிரகாஷ் ஆகியோரின் சார்பில் என். ஸ்ரீகாந்தன், எஸ்.பஞ்சாட்சரன், ஏ.பிரியந்தன் ஆகிய சட்டத்தரணிகள் ஆஜராகினர். வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

# வழிபடுநர் சபை, உறுப்புரிமை விண்ணப்பம் கோரல்-2014

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத்திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 2013.12.01 தொடக்கம் 2013.12.31 பிற்பகல் 5 மணிவரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக்கட்டளை , தபாற்கட்டளை விபரங்கள் தேவைப்படும் இடத்தில் 021 3213024, 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம்.

2013 ஆம் ஆண்டு வழிபடுநர் சபை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் சபையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2 ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பு:-

விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

- ✦ சமாதான நீதவான்
- ✦ இந்துமதகுரு
- ✦ இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
- ✦ கிராம சேவை உத்தியோகத்தர்
- ✦ அரசாங்கப் பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

அன்னையின் சேவையில்:- ந.மோகனரூபன்- செயலாளர் , அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

முதலாவது அட்டவணை

வழிபடுநர் சபை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம்- 2014

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:- ....................................................................
2.முகவரி:-....................................................................
3.பிறந்த திகதி:-....................................................................
4.நீர் ஓர் இந்துவா?....................................................................
5.நீர் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநரா?....................................................
6.விளம்பர வாசகம் 2 (அ) அல்லது (ஆ) வின் பிரகாரம் உறுப்புரிமையைத் தகுதியுடையவராயின் பின்வரும் விபரங்களைத் தரவும்.

அ. இவ் ஆலயத்தில் ஏதாவது உபயங்களுக்கு உரித்துடையவராய் இருக்கின்றீரா?..............................

ஆ.நித்திய பூசையா/உற்சவமா....................................................................

(நித்திய பூசையாயின் திகதியையும் உற்சவமாயின் அதன் விபரத்தையும் தருக)

இ.உபயப் பணம் செலுத்தப்பட்டிருப்பின் ப.சீ.இலக்கம் ............. திகதி............

7. நீர் ஏதாவது குற்றத்தின் பேரில் எந்த ஒரு நீதிமன்றத்தாலேனும் தண்டிக்கப்பட்டுள்ளீரா?
8.இக்கோயில் மாத வேதனம் பெறும் அல்லது கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ/ குருவாகவோ உள் ளீரா?

9. இக்கோயிலில் நீர் ஏதாவது ஒப்பந்தம் செய்துள்ளீரா?
10. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/ தபாற்கட்டளை பற்றிய விபரம்

கட்டளை இல.................... திகதி.................... தொகை...............

எனக்குத் தெரிந்த வகையிலும் நம்புகின்ற வகையிலும் மேலே என்னால் கூறப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவை என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். வழிபடுநர் சபையின் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு நான் இத்தால் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

................. ..................................

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

இவ் விண்ணப்பத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. இவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் 20..... வருடம் மார்கழி மாதம்......... ஆம் திகதியே இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயரும் பதவி முத்திரையும் என்முன்பாக

..................................

..................................

அத்தாட்சிப்படுத்துவரின் கையொப்பம்

***குறிப்பு:- அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான றபர் ஸ்டாம் இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 31.12.2013 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.***

## நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

இரண்டாவது அட்டவணை

வழிபடுநர் சபை உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்- 2014

கௌரவ செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோயில், நயினாதீவு.

அன்புடையீர்!

2014 ஆம் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கும் ஆண்டிற்கான எனது வழிபடுநர் சபைச் சந்தாவைப் புதுப்பிப்பதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன். இத்துடன் ரூபா பத்து ஐம்பதுக்கான இலக்கம்................... உடைய காசுக்கட்டளை, தபாற் கட்டளை இணைத்துள்ளேன். வழிபடுநர் சபை உறுப்புரிமை வேண்டிய எல்லாத் தகைமைகளையும் நான் தொடர்ந்து பெற்றிருக்கின்றேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

1.எனது பெயர்:........................................................
2.முகவரி:-........................................................
3. ஆலயத்தில் எனக்கு இருக்கும் உபயம்.:-........................................
(உபயம் நித்திய பூசையாயின் திகதியையும் உற்சவமாயின் அதன் விபரத்தையும் தருக)
4.உபயப் பணம் செலுத்தப்பட்டுள்ள ப.சீ.இல.................... திகதி........................
5.எனது முன்னைய உறுப்புரிமை இல.:- 2011 இல்............, 2012 இல்..............., 2013 இல்.....................

.............................. ..............................

திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

இவ் விண்ணப்பத்தில் உள்ளவை யாவும் இதில் சொல்லப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் வாசித்து விளக்கப்பட்டன. இவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும். இவர் இவற்றை நன்கு விளங்கிக் கொண்டு என் முன்னிலையில் ............ வருடம் மார்கழி மாதம்................. ஆம் திகதியே இன்று கையொப்பமிட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

பெயரும் பதவி முத்திரையும் என்முன்பாக

..................................

..................................

அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு:-அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான றபர் ஸ்டாம் இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 31.12.2013 ஆம் திகதி மாலை 5 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

(அ/5598)

# த. தே. கூட்டமைப்பிற்குள் காமராஜர் திட்டம் அவசியம்

## தமிழரசு கட்சியின் இளைஞர் அணி செயலாளர் வி.எஸ்.சிவகரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றம் தேவை. அதாவது காமராஜர் இளையோருக்கு இடம்விட்டு போக வேண்டும் என்பதற்காக பதவியையும் தலைமையையும் விட்டுச்சென்றது போல் கூட்டமைப் புக்குள் ளும் காமராஜர் திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். தமிழ் தலைவர்களிடம் இராஜதந்திரம் என்பதே இருந்ததில்லை. 60 ஆண்டுகளாக சிங்கள புத்தி ஜீவிகளுக்கு கூட எங்களது பிரச்சினைகளை தெளிவாக எடுத்துக் கூற தலைமைகள் தவறி விட்டது. சரியான சர்வதேச சிந்தனைக்குள் தமிழர்கள் கொண்டு செல்லப்படவில்லை என தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி செயலாளர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணி நிர்வாகத்தெரிவும் பொதுக் கூட்டமும் வவுனியா குருமன்காடு தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

அரசியல் அல்லது பொது வாழ்க்கை என்று சென்றால் பல பிரச்சினைகள் வரத் தான் செய்யும். குடும்பத்தில் பிரச்சினைவரும் சமுதாயத்தில் முரண்பாடுகள் ஏற்படும் இராணுவத்தால் பிரச்சினைவரும் அவர்களின் புலனாய்வாளர்களினாலும் பிரச்சினை வரும். பொலிஸாலும் பிரச்சினை வரும். அத்துடன் எங்களுடைய கட்சியினாலும் பிரச்சினை வரும். அத்துடன் 4 ஆம் மாடிக்கு போக வேண்டியும் வரும். இவற்றையெல்லாம் பொறுமையாக சகித்துக்கொள்ளும் பக்குவத்துடன் தேசியத்திற்காகவும் சமூக விடுதலைக்காகவும் என்ற கோட்பாட்டை நாம் உணர்ந்து கொண் டோமேயானால் தான் நாங்கள் இந்த சமூகத்தை வென்றெடுக்கக் கூடிய அடித்தளத்தினை உருவாக்க கூடியவர்களாக நாம் இருப்போம்.

எமக்கு ஏற்றமிகு அரசியல் சிந்தனையூள்ள இலட்சியம்மிகு சிந்தனை உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான சூழல் ஏற்படுவதற்கு இளைஞர்களின் வகிபாகம் மிகவும் இன்றியமையாததாகவுள்ளது.

நல்லவர்கள், நேர்மையானவர்கள், சமூக சிந்தனையுள்ளவர்கள், தமிழ் தேசியத்தில் விசுவாசமுள்ளவர்கள் என எம்மை நாம் மாற்றும் போதுதான் நாம் எங்களுடைய நிலைப்பாட்டை தக்கவைத்துக் கொண்டு அரசியலினை முன்னகர்த்த முடியும்.

உப்புச் சப்பு இல்லாத மாகாண சபையிலே தமிழ்த் தேசியம் என்ற உயர்ந்த இலட்சியத்துடன், உயர்ந்த கோட்பாட்டுடன் 5 இலட்சம் மக்களை பலிகொடுத்து 47 ஆயிரம் போராளிகளை இழந்து 89 ஆயிரம் விதவைகள் வடக்கு, கிழக்கில் வைத்துக் கொண்டு 32 ஆயிரம் தபுதாரர்களையும் 40 ஆயிரத்துக்கும் அதிகமான அநாதைகளையும் 27 ஆயிரம் அங்கவீனர்களையும் வைத்துக்கொண்டு எங்களுடைய நிலங்களையும் நாங்கள் இழந்து கொண்டு மாகாணசபையின் இலக்க அல்லது அலகு எமக்கு தீர்வாக அமையுமா? என்று சிந்திக்க வேண்டும். அது தீர்வின் தொடக்க புள்ளியாக கூட கருத முடியாது. அதிகாரமில்லாத அமைச்சுப் பதவிக்காகவும் சத்தியப்பிரமாணத்திலும் எம்மவர்களின் கொள்ளை கோட்பாடுகளை சந்தி சிரித்தது என்பதனை யாராலும் மறந்துவிட முடியுமா? தமிழ்த் தேசிய இனவிடுதலை அரசியல் கோட்பாட்டிற்கு பதவி மோகபோட்டி எமக்கு ஏற்புடையதா?

தன்னால் கொண்டு வரப்பட்ட மாகாண சபையை தமிழர்களுக்கு திணித்து அதற்கு மேல் தமிழர்கள் சிந்திக்காத வகையில் இந்த மாகாண சபையை இயங்க வைக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு நிறையவே உள்ளது.

ஆனால், வடக்கில் மாகாணசபை சிறப்பாக இயங்குமாக இருந்தால் தெற்கில் மஹிந்த அரசுக்கு ஆட்சியை நடத்துவதற்கு திரிசங்கு நிலை ஏற்படும். இந்நிலையில் வடக்கு, கிழக்கில் ஜனநாயகமற்ற சூழலையும் குழப்பமான நிலையையும் உருவாக்கி வைத்திருத்தல் என்ற தெற்கு அரசியலின் செயற்பாடு 70 களிலேயே தொடங்கிவிட்டது. அவ்வாறு குழப்பமான நிலையிருந்தாலேயே தெற்கில் இனவாத அரசியலை தக்க வைத்திருக்க முடியும்.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியாவை சமாளிக்க வேண்டிய நிலையும் தனது பதவியையும் காப்பாற்ற வேண்டிய நிலையும் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் எதுவும் இல்லாத மாகாணசபையையும் இயங்கவிடாத நிலை தேவையாக உள்ளது. ஆனால், மஹிந்தவோ 13 தருகின்றேன். இதற்கு மேல் பிளஸ் தருகின்றேன் என எவரும் கேட்காமல் தெரிவித்திருந்தார். இன்று அதையும் நீக்க முனைகிறார்.

இந்த நிலையில் தான் இந்தியாவும் தற்போது ஓடிவந்து நிற்கின்றது. நாங்கள் 58 ஆயிரம் கோடியை வடக்கு, கிழக்கில் கொட்டியுள்ளோம் என யாருக்காக கொட்டினீர்கள். நீங்களும் யுத்தத்தில் பங்கேற்று எங்களை அழித் தமையால் வீதி போட்டுத் தருகின்றோம். வீடு கட்டித்தருகின்றோம் என நீலிக்கண்ணீர் வடிக்கிறீர்கள். இதனை ஏன் சொல்கின்றேன் என்றால் எங்களுடைய சிலரும் இதற்கு தற்போது உடன்படுகின்றார்கள் போல் இருக்கின்றது. இது ஆபத்தான கட்டம்.

அண்மையில்வந்து சென்ற பிரித்தானிய பிரதமரோடு எங்கள் தலைவர்கள் பேசிய பேச்சு 13 ஐ வலுப்படுத்துங்கள் என்பதாகும். அதை எவ்வாறு வலுப்படுத்துவது. அதில் தானே ஒன்றுமேஇல்லையே. அவ்வாறு இருக்கும் போது எவ்வாறு வலுப்படுத்துவது என்று எங்கள் தலைவர்கள் கேட்பார்கள். சமஷ்டி அடிப் படையிலான தீர்வை வலியுறுத்த தயங்கு வது ஏனோ?

எனவேதான் எங்கள் தலைவர்கள் திசை மாறி செல்கின்ற போது அவர்களை கடி வாளம் போட்டுஇழுத்துவந்து எமது நிலைப் பாட்டுக்குள் வைத்தி ரு க்க வேண்டும்.

நடந்து முடிந்த பொதுநலவாய மாநா ட்டை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பினர் சரியான முறையில் பயன்படுத்தவில்லை. வெறுமனே போராடு வோம் போராடுவோம் என்று கூறிக்கொண்டு அடுத்தமுறை பாராளுமன்ற கதிரையை தக்க வைப்பதற்கு செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் நிலவுகின்றது.

ஏனெனில் வந்திருந்த 53 நாடுகளுக்கும் எங்களுடைய இனப்பிரச்சினை தொடர்பா[illegible] மிகத்தெளிவாக திட்டவட்டமாக தீர்க்கமாக இங்கு நடந்தது. இன அழிப்பு தொடர்பாகவும் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பாகவும் அத்துடன் எமது பிரதேசம் அங்குலம் அங்குலமாக அபகரிக்கப்பட்டு வருகின்ற நிலைமையை மிகவும் விரிவாக எழுத்து மூலமாக வழங்கியிருக்கலாம். இல்லையேல் தூதுவர்களிடமாவது வழங்கியிருக்கலாம். ஆனால் எங்கள் தலைவர்கள் அதனை செய்யவில்லைஎன்கின்றகுற்றச்சாட்டும் சமூக ஆர்வலர்களால் முன்வைக்கப்படுகின்றது.

அவர்களிடத்தில் முறையான நிகழ்ச்சி நிரல்கள் இருப்பதுமில்லை. திடமான கொள்கைத்திட்டங்களும் வகுத்ததுமில்லை. ஆனால் புதிய வேண்டும் புதிய வேண்டும் என்று மட் டும் உரத்துக்குரலிடுகிறார்கள் இது பாராளுமன்ற கதிரையை தக்க வைத்துக் கொள்வதற்காக மட்டுமே என மக்கள் விமர்சிக்கிறார்கள். மக்களுடைய பிரச்சினை வேறு. இவர்களுடைய பிரச்சினை வேறு. ஏனெனில் கூட்டமை ப்பு மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை. இவை தமிழ்த் தேசியத்தின் அடிப்படை இருப்புக்கு ஆபத்தானவை. விடு தலைப்புலிகளின் ஆயுதப்போராட்டமும் இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இறந்து போன தும் அல்லது காணா மற் போன சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 692 பேரின் தியாக முமே ஐ.நா. வரை எமது பிரச்சினையை கொண்டு சென்று சர்வதேச மயப் படுத்தியதே தவிர இவர்களது போராட்டங்கள் எமது பிரச்சினையை சர்வதேசத் திற்கு கொண்டு செல்லவில்லை என தெரிவித்தார். (அ-6)

---


உ
சிவமயம்

### காரைநகர்-ஈழத்துச்சிதம்பரம்(திண்ணபுரம் சிவன் கோயில்)

மாணிக்கவாசக சுவாமிகள் மடாலயத்துடன் இணைந்த புதிய அருளெழுச்சி கொண்ட ஸ்ரீமனோன்மணி அம்பாள் மண்டபம் மங்கலகரமான திறப்பு விழா – 01.12.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7 மணி முதல்

மார்கழி திருவாதிரை ஆருத்திரா தரிசனத்தைப் பெறவும், திருவெம்பாவைக்கால திருவருட்பெருக்கில் மூழ்கவும் மற்றும் திருவிழாக்காலங்களிலும் சிதம்பரம் நாடும் அடியார் திருக்கூட்டம் ஆறுதல் பெறவும் அவர்கள் மகேஸ்வர பூசையிற் கலந்து கொள்ளவும் *ஈழத்துச் சிதம்பரத் திருவுளத்தான்* திரு. சண்முகன் சிவஞானம் அவர்களது முழுமையான உபயம் அருளெழுச்சி கொண்ட ஸ்ரீமனோன்மணி அம்பாள் மண்டபம் மங்கலதீப, திருக்குட, மலர்க்குவை அலங்காரத்துடன் மூதறிஞர், கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள் அருளாசியுடன் திறந்து வைக்கப்படும்.

**திறப்புவிழா நிகழ்வுகள்**

மங்கல விளக்கேற்றல்:– ஆதீனகர்த்தாக்கள் சிவத்திரு ஆ. அம்பலவிமுருகன்
சிவத்திரு. மு.சுந்தரலிங்கம்
திருமுறை ஓதல்:– சிவத்திரு. மு.சுந்தரலிங்கம் (கோயில் ஆதீனகர்த்தா)
திரைநீக்கம்:– திரு. திருமதி சண்முகம் சிவஞானம்
வரவேற்பு நடனம்:– காரைநகர், ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய மாணவிகள்
வரவேற்புரை:– உயர்திரு. க.சோமசுந்தரம்
(அறங்காவலர், ஐயனார் தேவஸ்தானம், காரைநகர், அன்னதான மடாலய உபதலைவர்)
தலைமையுரை:– லயன் (E.S.P. நாகரத்தினம் (ஆயுட்காலத்தலைவர், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை)
ஆசியுரை:– நல்லூர் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
ஸ்ரீவேத வித்யாசாகரர் சுவாமிகள்
(8 ஆவது குருபீடாதிபதி, ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்தமடம்)
கோயில் பிரதம சிவாச்சாரியார்
பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்
தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் ஸ்ரீலஸ்ரீ மோகனதாஸ் சுவாமிகள்
சிறப்புப்பேருரை:– செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர், சிவபூமி அறக்கட்டளை, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
பொருள்: "தானங்களிற் சிறந்தது அன்னதானம்"
சிவத்திரு.ந.விஜயசுந்தரம்
(வலம்புரி ஆசிரியர்)
பொருள்:– "ஈழத்து மடாலயங்கள்"

பாராட்டு வைபமும் / அறக்கொடைச் செம்மல் / விருது வழங்கலும் } திரு.திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதிகள்

**கலை நிகழ்ச்சிகள்**

மிருதங்க இசை:– காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்
குழு இசை:– காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவிகள்
கரகம்:– பாலர் பூங்கா (Kids Park)
நாட்டிய நாடகம்:– பத்மாசுரன் மோகினி
(யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள்)
நன்றியுரை:– திரு. அ.நா.பாலகிருஷ்ணன்
(செயலாளர், மாணிக்கவாசகர், மடாலயம்)
நிகழ்ச்சித் தொகுப்பு:– சமூகத்திலகம் . திரு. க.கு.க.சிவபாலன் (அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்)
திருமுறை ஓதல்
விழா நிறைவு

ஐம்பொன்னால் உருவான திரு அவதாரத் தெய்வமாம் சிவமைந்தர்கள் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு சிறப்புப்பூசை வழிபாடுகள் நடைபெற்று மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.

ஆதீனகர்த்தாக்கள் / மாணிக்கவாசகர் மடாலய
சிவத்திரு. ஆ.அம்பலவிமுருகன் / அன்னதான சபை.
சிவத்திரு. மு.சுந்தரலிங்கம்

(4608)

காரைநகர் செல்லும் அனைத்து தனியார் பேருந்துகள் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கோயில் செல்லும்


---


### கண்ணீர் அஞ்சலி

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர்
திரு.பத்மநாதன் திருக்குமார் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் திருமதி பத்மநாதன் இராசரத்தினம்**



அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

(C-5592)

சுதந்திரம்! அது இல்லாதபோது நிலம், நீர், சிறப்பு, செல்வாக்கு ஆகிய எது இருந்தும் என்ன பயன்? சுதந்திரம்தான் மனிதனின் முதல் தேவை. *~எமர்சன்*

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## சிறிதரனின் பாராளுமன்ற உரையை சம்பந்தர் நியாயப்படுத்தியிருக்க வேண்டும்

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் மாவீரர் தினம் ஆகியன தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஆற்றிய உரை கடந்த பல வருடங்களுக்குப் பின்னர் பாராளுமன்ற உரை தொடர்பில் தமிழ் மக்களை ஈர்த்துள்ளது.

பாராளுமன்றம் என்பது மக்கள் பிரதிநிதிகள் உறங்கும் இடமல்ல. மாறாக அது உறங்கும் மக்களை விழித்தெழச் செய்யும் இடம்.

ஒரு காலத்தில் பாராளுமன்றத்தில் தமிழ் எம்.பிகள் உரையாற்றினால், அந்த உரை பாராளுமன்றத்தின் முழுக் கவனத்தை மட்டுமன்றி பொது மக்களையும் ஈர்த்துக் கொள்ளும்.

இதன் காரணமாக பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளை அறிவதற்கு மக்கள் ஆர்வம் காட்டியதுடன் அது தொடர்பில் அவர்களுக்கிடையே வாதப் பிரதிவாதங்களும் நடந்தேறும். ஆனால் இன்று அந்நிலைமை இல்லாமல் போயிற்று.

இதற்குக் காரணம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உப்புச்சப்பற்ற உரைகளையே இப்போது பாராளுமன்றத்தில் ஆற்றுகின்றனர்.

இப்போதெல்லாம் பாராளுமன்றம்; பதவியை அலங்கரிக்கும் இடமேயன்றி, மக்களின் பிரச்சினைகளை ஆராயும் இடமல்ல என்றாயிற்று. எனினும் கடந்த 26ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆற்றிய உரை பாராளுமன்றத்தையும் பொதுமக்களையும் ஈர்த்துக் கொண்டது.

பொருத்தமான நேரத்தில் பொருத்தமான விடயத்தை சிறிதரன் எம்.பி பாராளுமன்றத்தில் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் உணர்வுநிலைகளை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறவேண்டியது அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தார்மீகக் கடமை. அதனையே அவர் செய்துள்ளார் எனலாம்.

நிலைமை இதுவாக இருக்க, பாரளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆற்றிய உரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு உட்பட்டதல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டிருப்பதுதான் இங்கு அதிர்ச்சியைத் தருகின்றது.

தமிழ் மக்களின் மன உணர்வுகளை நீங்கள் பேசுவது உங்களுக்கு அரச உயர்மட்டத்தில் கசப்பை ஏற்படுத்தும் என்று கருதினால், மற்றவர் பேசும்போதாவது அமைதியாக இருக்கலாம்.

அதைவிடுத்து முந்திக்கொண்டு சிறிதரன் எம்.பி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உடன்பாடானதல்ல எனக் கூறும்போது,


சிங்கள எம்.பிகளும் சிங்கள மக்களும் எங்களின் ஒற்றுமை தொடர்பில் எத்தகைய மதிப்பீட்டைச் செய்வார்கள் என்று ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, வல்வெட்டித்துறையில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் முதன்மை வேட்பாளரான சி.வி.விக்னேஸ்வரன் உரையாற்றும்போது புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு மாவீரன். இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் நன்கு தெரியும் என்று கூறியிருந் தார். அந்தக் கூட்டத்தில் சம்பந்தரும் உடன் இருந்தார்.

வல்வெட்டித்துறை மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக விடுதலைப்புலிகளை தூக்கிக் காட்டிய கூட்டமைப்பு இப்போது அவர்களை ஓரங்கட்ட முற்படுவதையே சம்பந்தரின் மறுப்பு சுட்டி நிற்கிறது.

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை தூக்கிப் பிடித்தபோது, சிங்கம் காளியின் வாகனம் என்று தனது செயலுக்கு நியாயம் கற்பித்த சம்பந்தர், புலிகள் பற்றி சிறிதரன் பேசியதை உணர்ச்சி வசப்பட்டுவிட்டதாகக் கூறுவது எந்தளவுக்கு நியாயம்.

உணர்ச்சி வசப்பட்டு சிங்கக் கொடியை சம்பந்தர் தூக்கவில்லை என்றால் புலி, ஐயப்பனின் வாகனம் என்று பொருள் உரைத்து சிறிதரனின் பாராளுமன்ற உரைக்கு நியாயம் கற்பிக்காமல் விட்டது ஏன்? என்பதை தமிழ் மக்கள்தான் சிந்திக்க வேண்டும்.




## 'கூலி' -பேசப்படவேண்டிய குறும்படம்

தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க.இ.கமலநாதனின் கதை, வசனம், இயக்கத்தில் 'கூலி' என்ற பெயருடைய குறும்படம் இன்று வெளிவருகின்றது. ஏறத்தாழப் பதினைந்து நிமிடங்கள் ஓடும் இக் குறும்படம் இரண்டு பிரதான விடயங்களை மையப்படுத்திப் பேசுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்குக் கூலியாக அவர்களது பிள்ளைகளுக்கும் அத்தகைய பாதிப்பு நேரும் என்பது ஒன்று. பிள்ளைகளின் நடவடிக்கைகள் மீது பெற்றோர் முழுமையாகக் கவனம் செலுத்தாத விடத்து அவர்கள் பிறழ்வுகளை எதிர்கொள்ளலாம் என்பது மற்றையது.

குகனேசன், றஞ்சிதராணி, தனபாலன், றம்மியா, டிலக்ஷனா, செல்வம் என ஏழு நடிகர்கள் இக்குறும்படத்தில் நடித்துள்ளனர். இசை, ஒலிப்பதிவு கேதீஸ், ஒளிப்பதிவு க.இ.கமலநாதன், ஒப்பனை சிந்துஜா, படத்தொகுப்பு சதாளன் எனக் கலைஞர்களின் சங்கமமாகப் படம் காணப்படுகின்றது.

வசதிபடைத்த குடும்பத்தைச் சேர்ந்தவர் தனது வீட்டில் வேலைக்கு வரும் பிள்ளை ஒன்றைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்கிறார். சம காலத்தில் அவரது பிள்ளையை பாடசாலைச் சீருடையுடன் முறையற்ற விதத்தில் கர்ப்பம் தரித்தவளாக வைத்தியசாலையில் எதிர்கொள்கின்றார். ஆக, அரசன் அன்று அறுப்பான். தெய்வம் நின்று அறுக்கும். இல்லை இல்லை அன்றே அறுக்கும் எனக் கூறிப் படத்தை முடிக்கின்றார் கமலநாதன்.

காட்சி அமைப்புக்களைப் பொறுத்தவரையில் அவை விரைவாக நகர்த்திச் செல்லப்படுகின்றன. கேதீசின் இசைக்கோர்ப்பு படத்திற்குப் பக்கபலமாக உள்ளது. குறைந்த வளங்களைப் பயன்படுத்தி ஒளிப்பதிவு சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. கடற்கரைக் காட்சிகள் மிகவும் இரசிக்கும் படியாக உள்ளன. "பசித்த வயிறு நிரப்ப ஒருத்தி பாதையைத் தேடுகிறாள" எனத் தொடங்கும் பாடல் தமிழினி பிலோமினாவின் குரலில் இனிமையாக உள்ளது. வேலைக்காரியாக சிறுமி ஒருத்தி ஆக்கப்பட்டமைக்கு எமது நாட்டின் போர் நிலைமைகளே காரணம் என இயக்குநர் பூடகமாகக் காட்டுகின்றார். விளையாட்டுப் பொருளாகக் காணப்பட்ட உலங்கு வானூர்தி ஒன்றைக் கண்டதும் அச்சங் கொள்ளும் மனநோயாளியாக அவளின் தாய் சித்திரிக்கப்படுகின்றாள். தாயின் நடிப்பும் ஒப்பனையும் படத்திற்கு வளம் சேர்க்கின்றன. வேலைக்காரச் சிறுமியும் தன் பங்கைப் பிரமாதமாக வெளிப்படுத்தியுள்ளார். பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளைக் காணும் போது அவர் வெளிப்படுத்தும் ஏக்கப்பார்வை அவரது நடிப்பாளுமைக்குச் சான்று பகர்கின்றது.

தென்னிந்தியச் சினிமாத்தனம் இக்குறும்படத்திலும் ஆங்காங்கே வெளிப்படுகின்றது. இன்றைய சூழலில் இது தவிர்க்கவியலாததாக இருக்கலாம். எது எவ்வாறெனினும் இன்றைய யாழ்ப்பாணத்தில் பேசப்பட வேண்டிய செய்தியொன்றை சிங்கள உபதலைப்புக்களுடன் பேசியமைக்காகக் கமலநாதன் குழுவினருக்கு ஒரு சபாஷ் போடலாம்.

**ச.லலீசன்**
**விரிவுரையாளர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

## மீனவர்களை காணவில்லை

கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 8 மீனவர்களைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலையினால் இவர்களுக்கு ஏதேனும் அனர்த்தம் ஏற்பட்டிருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். (எ-11)

## தவிசாளர் மீது தாக்குதல் வழக்கு விசாரணை ஆரம்பம்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பொ.வியாகேசின் வீடு மற்றும் வாகனம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்காக பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 25 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு தவிசாளரின் வீடு, வாகனம் என்பன இனந்தெரியாதோரால் தாக்குதலுக்குள்ளானபோது, வீட்டின் கண்ணாடிகளும், வாகனத்தின் கண்ணாடிகளும் சேதமாக்கப்பட்டன.

இவ்வழக்கினை நேற்றையதினம் வல்வெட்டித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எ.கே.நடராஜா முன்னிலையில் சமர்ப்பித்தனர்.

அத்தோடு பொலிஸாரினால் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும், அதற்கு இன்னும் தவணை தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

இதனடிப்படையில், பதில் நீதவான் எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி வரை இவ்வழக்கு விசாரணைகளை ஒத்திவைப்பதாக உத்தரவிட்டார். (எ-9,24)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**வேலைச்சுமையிலிருந்து விடுதலை**

வேலையிலிருந்து விடுதலை என்பது வேலையிலிருந்தே விடுதலை என்பதல்ல. இது வேலைச்சுமையிலிருந்து விடுதலையாகும். நமக்கு விடுதலை கிடைத்துவிட்டால் நமக்குச் சரியானதொரு மன அமைப்பு கிடைத்துவிடும். இந்த மனம், அனைத்துப் போராட்டங்கள், விருப்பு வெறுப்புகள், கட்டுப்பாடுகள் போன்ற பலவற்றிலிருந்தும் தனிப்பட்டு **விருப்பத்துடன் வேலையைச் செய்வதற்கு வேண்டிய பிராண சக்தியைப் பெற்றுவிடுவோம்.**

இந்த விடுதலைக்குப்பிறகு நாம் செய்யும் எச்செயலிலும் மகிழ்ச்சியே இருக்கும். எடுத்துக்காட்டாக நாம் எந்தவொரு வேலையைப் பற்றிச் சிந்தித்தாலும் அந்த வேலையைச் செய்வதற்கு முன்பே அந்த வேலையின் சுமையை நாம் பெறுவதில்லை. ஆகவே நாம் எதனைச் செய்தாலும் நாம் முழுமனதுடன் ஈடுபடுவோம். எனவே அது முழுமை கொண்டிருக்கும்.

## தாக்குதல்தாரிகளின் தகவல் தந்தால் நடவடிக்கை

### பொலிஸார் கூறுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்களின் வீடுகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தகவல் தரப்பட்டால் நடவடிக்கை எடுக்க முடியும் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முஹமட ஜெப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாக்குதல் சம்பவங்களின் சூத்திரதாரிகள் யார் எனத் தெரியாது என மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் யார் எனக் கூறப்பட்டால் நடவடிக்கையெடுக்க முடியும் என்றார். (அ-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## துணிவுடன் செயலாற்று



❖ தியாகம் செய்தால் மட்டுமே பிறரின் இதயத்தை வெல்ல முடியும். நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே நன்மையும், உண்மையான வாழ்வையும் அனுபவிக்கிறோம்.

❖ எனக்கு எதுவும் தெரியாது என்ற மனநிலை இருக்கும் வரை, எதையும் வாழ்வில் சாதிக்க முடியாது.

❖ கோழையும், முட்டாளும் விதியை நம்புகிறார்கள். ஆனால், ஆற்றல் மிக்கவனோ என் விதியை நானே வகுப்பேன் என்று உறுதியைப் பெற்றிருப்பான்.

❖ சுதந்திரமான நிலையில்தான் அன்பு பிரகாசிக்க முடியும். அன்பின் வழியாக மட்டுமே நம் கடமையை இனிதாக நிறைவேற்ற முடியும்.

❖ எந்த வேலையாக இருந்தாலும், அதை ஒரு வழிபாடாக செய்யுங்கள். அதற்கு அப்பாலுள்ள எந்த விஷயத்தைப் பற்றியும் சிந்தனை செய்ய வேண்டாம்.

❖ பலவீனத்திற்குப் பரிகாரம் பலத்தை சிந்திப்பதே. துன்பம் வந்த சமயத்தில் துணிவுடன் செயலாற்றுங்கள்.

# லிபியாவில் ஆயுதக் கிடங்கு வெடித்து 40 பேர் உயிரிழப்பு

**(டிரிபோலி)**

**லிபியாவில் ஆயுதக்கிடங்கு வெடித்து 40 பேர் பலியாகினர். பலர் காயம் அடைந்தனர். மேலும் பலரது நிலைமை கவலைக் கிடமாகவுள்ளது.**

லிபியாவில் தெற்கு பகுதியில் சாபா நகரம் அருகே பிராக் அல்சடி பகுதியில் அரசுக்கு சொந்தமான ஆயுதக் கிடங்கு உள்ளது. அங்கு லிபியாவை சேர்ந்தவர்களும், ஆபிரிக்கர்கள் சிலரும் சேர்ந்து ஆயுதங்களை திருட உள்ளே புகுந்தனர்.

அப்போது அங்கு வெடி விபத்து ஏற்பட்டது. இதனால் ஆயுதங்கள் வெடித்து சிதறின.

அதில், 40 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் காயம் அடைந்தனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

எனவே இச்சம்பவத்தில் மேலும் பலர் பலியாகக் கூடும் என தெரிகிறது.



இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை. ஒருவேளை அயுத கொள்ளையர்கள் தீவைத்ததில் இச்சம்பவம் நடந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

கடாபியின் ஆட்சிக்கு பிறகு ஆயுதக் கிடங்கு பாதுகாப்பதில் இராணுவம் படாதபாடுபடுகிறது. ஏனெனில் தீவிரவாதிகள் மற்றும் கடத்தல் கும்பல் ஆயுதங்களை கொள்ளையடித்து வருகின்றது. (2)

# சந்திரனில் தாவரங்கள் வளர்க்க நாசா திட்டம்

## தாவர விதைகளை எடுத்துச்செல்ல முடிவு

(லண்டன்)

சந்திரனில் தாவரங்கள் வளரச் செய்யும் ஆராய்ச்சியில் அமெரிக்காவின் நாசா விண்வெளிமையம் ஈடுபடவுள்ளது. அதற்கான ஆய்வை வருகிற 2015ஆம் ஆண்டு தொடங்கவுள்ளது.

அதற்கான ஆயத்த பணியை இப்போதே தொடங்கிவிட்டது. அதற்காக எந்தவகை பயிர்களை முளைக்க வைத்து விளைய செய்யமுடியும் என ஆய்வு நடத்தியது.

அதில், டர்னிப் எனப்படும் சீனம் முள்ளங்கி, துளசி, ஓமம் மற்றும் அராபிடாப்சிஸ் என்ற ஒருவகை தாவரம் பயிரிட முடியும் என கண்டறியப்பட்டுள்ளது. அவற்றின் விதைகள் 5 முதல் 10 நாட்களில் முளைக்கும் தன்மையுடையது.

இந்த விதைகளை முளைக்க வைத்து காய்கறி விளைவிப்பதன் மூலம் அங்கு மனிதன் தங்கி உயிர் வாழ முடியுமா என்ற ஆய்வையும் தொடர்ந்து நடத்த நாசா திட்டமிட்டுள்ளது. தாவரங்களை வளர்ப்பதற்காக சந்திரனுக்கு 2015ஆம் ஆண்டில் ஒரு ஆய்வுகூடம் அனுப்பப்படுகிறது. அதில் 5 முதல் 10 நாட்களில் முளைத்து வளரக்கூடிய மேற்குறித்த செடி வகைகளின் விதைகளும் எடுத்து செல்லப்படுகின்றன.



இந்த தாவரங்கள் செழித்து வளரும் பட்சத்தில் அங்கு மனிதனும் வாழ முடியும் என நாசா விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதற்கான ஆய்வும் தொடர்ந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான முன்னோடி ஆராய்ச்சியாக தாவரங்கள் பயிரிடப்படுகிறது. (2)

# 22 ஏவுகணைகளை நிறுத்த ரஷ்ய அரசு முடிவு

எல்லை பகுதிகளில், கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய, 22 நவீன ஏவுகணைகளை நிறுத்த ரஷ்ய அரசு முடிவு செய்துள்ளது.

பனிப்போர் நடந்த காலத்தில், அமெரிக்காவும், ரஷ்யாவும் போட்டி போட்டுக்கொண்டு ஆயுதங்களை தயாரித்தன. 2010ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், ஆயுதங்களை குறைக்கும் நோக்கில், அமெரிக்காவும், ரஷ்யாவும், அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

செசன்யா பயங்கரவாதிகளால், ரஷ்யாவுக்கு அச்சுறுத்தல் உள்ளது. இந்நிலையில், அடுத்த ஆண்டு இறுதிக்குள், எல்லைப் பகுதியில், கண்டம் விட்டு கண்டம் தாக்கும், 22 ஏவுகணைகள் நிறுத்தப்படும் என ரஷ்ய ஜனாதிபதி, விளாடிமிர் புடின் கூறியுள்ளார். ரஷ்யாவிடம் கண்டம் விட்டு கண்டம் தாக்கும் 326 ஏவுகணைகளும ஆயிரத்து50 அணு ஆயுதங்களும் உள்ளன. ரஷ்ய ஜனாதிபதி அறிவிப்பை அடுத்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் எல்லை பகுதியில் காற்றுப் புகாத இடத்தில் நிறுத்தப்படும் என பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2)

# "நான் துறவி அல்ல" ஆங்சான் சூகி தெரிவிப்பு



" நான் துறவி அல்ல" என, மியன்மார் எதிர்க்கட்சி தலைவர் ஆங்சான் சூகி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு முதன் முறையாக பயணம் மேற்கொண்டுள்ள சூகி சிட்னி நகரில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில்,

நான் ஒரு அரசியல் தலைவராகத்தான் சிந்திக்கிறேன். என்னை நானே ஒரு அரசியல் தலைவராகக் காண்கிறேன் நான் ஒரு துறவியோ, சின்னமோ அல்ல. நான் ஒரு சாதாரண மனுஷி, நேர்மையான அரசியல்வாதியாக இருக்க விரும்புகிறேன். இது போன்றபட்டங் களை விரும்புவதில்லை எப்போதும் சாதாரண அரசியல்வாதியாக இருக்க விரும்புகி றேன் என்றார். (2)

# தெலுங்கானா மாநிலம் அமைப்பதில் பலமான முட்டுக்கட்டைகள்

தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான ஆலோசனைகள் முடிந்து விட்டாலும், கடைசி நேர முட்டுக்கட்டைகள் பலமாக எழுந்துள்ளதால், புத்தாண்டில் தெலுங்கானா உதயமாவது சந்தேகமே என, டில்லி வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

தெலுங்கானா வரைவு மசோதாவை, உயர்மட்டக்குழு, ஏறத்தாழ தயாரித்து முடித்து விட்டாலும், இறுதி அறிக்கை, எப்போது மத்திய அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்படும் என பதில் சந்தேகம் எழுந்துள்ளது. காரணம், கடந்த புதன்கிழமை கூட்டம்முடிந்து வெளியில் வந்த உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, "இன்னும், ஆலோசனை முடியவில்லை. சில விடயங்களை இறுதி செய்ய வேண்டியுள்ளது என்றார்.

இதை வைத்துப் பார்க்கும் போது, புத்தாண்டில் தனிமாநிலம் உதயமாவதற்கான சாத்தியம் குறைவாகவேயுள்ளது.

ஜெகன் மோகன், விரைவில் ஜெயலலிதாவை சந்திக்க சென்னைக்கு வருகை தரவுள்ளார். இது ஒருபுறமிருக்க தெலுங்கானா மற்றும் தெலுங்கானா தவிர்த்து பிற பகுதியான, சீமந்திரா ஆகிய இரண்டுக்குமே, சிறப்பு அந்தஸ்து அளிக்க வேண்டுமெனில், அதை, அரசியல் சட்டதிருத்தம் மூலமாகவே செய்யமுடியும்.


இந்த சிக்கல்களுக்கு, தீர்வுகாண, காலஅவகாசம் தேவைப்படும் எனவே, தெலுங்கானா மசோதா, டிசெம்பர், 5இல் ஆரம்பமாகும் பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில், தாக்கல் செய்தவற்கு வாய்ப்பு இல்லை. மாறாக, சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டோ அல்லது பட்ஜெட் கூட்டத்தொடரின் போதோ தாக்கல் செய்யப்படலாம்.

எனவே, புத்தாண்டு பிறப்பதற்குள், தெலுங்கானா உதயமாவது சந்தேகமே என, தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)



**ஈரான், டெஹ்ரானிலுள்ள அரசு அலுவலகத்தில் அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரைவ்ஹானியை, ஐக்கிய அரபு எமிரேட் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா பின் ஷயத் (இடது) சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.**

# ஈரான் அணு உலை அருகில் நிலநடுக்கம்



(தெஹ்ரான்)

ஈரான் அணு உலை அருகில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் வீடுகள் இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் பலியாகினர். 30 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் ஈரான் போராஷ்ஜானில் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது,

5.6 ரிக்டர்அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. இடிபாடுகளில் சிக்கி இதுவரை 7 பேர் பலியாகினர்.

30 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இடிபாடுகளை அகற்றும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர். எனவே பலியானோர் எண் ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

இச் சம்பவத்தில் களிமண்ணால் கடடப் பட்ட பழங்கால கோட்டை அரண ஒன்று இடிந்து தரை மட்டமானது. (அ-2)

# கச்சதீவு வழக்கு; பதில் அளிக்க கால அவகாசம்

(புதுடில்லி)

கச்சதீவு வழக்கு குறித்து மத்திய அரசு பதிலளிக்க உச்ச நீதிமன்றம் கால அவகாசம் அளித்துள்ளது.

இலங்கை அரசுக்கு தாரை வார்த்த கச்சதீவை மீட்கக்கோரி, தி.மு.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தர விட்டிருந்தது.

ஆனால், பதில் மனுவை தாக்கல் செய்ய 4 வார கால அவகாசம் கோரியது மத்திய அரசு. மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் அளித்து உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (2)

# சிரியாவின் இரசாயன ஆயுதங்கள் மத்திய தரைக் கடலில் அழிப்பு

## அமெரிக்கா அறிவிப்பு

சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அமெரிக்கக் கப்பலிலேயே எடுத்துச் சென்று மத்தியதரைக் கடல பகுதியில் அழிக்க ஒபாமா அரசு வாய்ப்பளிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, இந்த அணுகுமுறை பினபற்றப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

சிரிய அரசு தரப்பு இரசாயன ஆயுதங் களைப் பயன்படுத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை கொன்று குவித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து சிரியாவுக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு எழும்பியது. சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்தது. இதற்கு, இரசாயன ஆயுதங்களை அழித்தால் இராணுவ நடவடிக்கையைத் தவிர்க்கலாம் என்ற சமரசத் திட்டத்தை ரஷ்யா முன் வைத்தது. இதை அமெரிக்கா ஏற்றுக் கொண்டது.

இந்நிலையில், சிரியாவின் இரசாயன ஆயுதங்களை சர்வதேசக்கடலில் அழிப்பதற்கு அமெரிக்கா வாய்ப்பு அளித்துள்ளது. இதனிடையே, நெதர்லாந்து நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு, எந்த நாடும், தனது சொந்த மண்ணில் இரசாயன ஆயுதங்களை அழிப்பதை விரும்பாது. எனவே, கடலில் அழிக்க அமெரிக்கா வாய்ப்புக் கொடுத்துள்ளது வரவேற்கத்தக்க விடயம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சிரிய ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்புக் குழுவின் செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் லாலி கூறுகையில்,

இரசாயன ஆயுதங்களை சிரியாவுக்கு வெளியே அழிப்பது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லை. வேறு வழியில் எவ்வாறு அழப்பது என்பது தொடர்பாக தோழமை நாடுகளுடனும், வேறு சில நாடுகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம். இரசாயன ஆயுதங்களை முற்றிலுமாக அழிக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்று தெரிவித்தார். (2)

# சம்பியன் லீக் கால்பந்து

## மான்செஸ்டர் யுனைடட் வெற்றி



ஐரோப்பாவில் உள்ள பிரபல கால்பந்து சங்கங்களுக்கு இடையே நடைபெற்று வரும் இத்தொடரின் லீக் சுற்றில் பேயர் லிவர்குசன் மற்றும் மான்செஸ்டர் யுனைடட் அணிகள் மோதின.

இதில், 5-0 என்ற கோல் கணக்கில் மான்செஸ்டர் யுனைடட் அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்தைச் சேர்ந்த நட்சத்திர வீரர் ரூனி, அந்தோனியா வெலன்சியா, கிறிஸ் ஸ்மாலிங் மற்றும் ஜானி எவன்ஸ் ஆகியோர் மான்செஸ்டர் யுனைடட் அணிக்கு கோல் அடித்தனர்.

"பி" பிரிவில் நடந்த கேலடசரி அணிக்கு எதிரான ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அதேபோல் பாரிஸ் எஸ்.ஜி. மற்றும் பேயர்ன் முனிச் அணிகளும் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றன.

சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் லீக் சுற்றில், மான்செஸ்டர் யுனைடட், ரியல் மாட்ரிட் மற்றும் பாரிஸ் எஸ்.ஜி. ஆகிய அணிகள் வெற்றிபெற்றன.

இதுவரை நடந்த லீக் சுற்றுகளின் முடிவில் 16 அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளன. டிசம்பரில் அடுத்த சுற்றுப் போட்டிகள் நடக்கும்.

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண துடுப்பாட்ட சுற்றுப் போட்டி

அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களின் பெண்கள் துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்தாட்ட துடுப்பாட்டப் போட்டிகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக அணிகள் மற்றும் யாழ்.மாவட்ட செயலக அணியுமாக மொத்தம் 16 துடுப்பாட்ட அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன. அணிக்கு 7பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாக இச்சுற்றுப்போட்டி விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கான துடுப்பாட்டம் அண்மைக்காலமாக பாடசாலை ரீதியிலாக வளர்ச்சி கண்டு வருவதுடன், அவை தற்போது கழகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள், பல்கலைக்கழகங் கள் உள்ளிட்டவற்றிலும் சிறப்பாக விளை யாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது

## பாகிஸ்தானின் வரலாற்றுச் சாதனை



தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை வென்றது மிகப்பெரிய சாதனை என பாகிஸ்தான் அணியின் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

### மிஸ்பா பெருமிதம்

இதில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்தது. அதுமட்டுமல்லாமல் தென்னாபிரிக்க மண்ணில் வெற்றியை சுவைத்த முதல் ஆசிய அணி என்ற சிறப்பையும் பெற்றது.

இதுகுறித்து அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறுகையில், இளம் வீரர்கள் அடங்கிய அணியை வைத்துக் கொண்டு, தென்னாபிரிக்காவை சொந்தமண்ணில் வீழ்த்தி தொடரை கைப்பற்றியது எங்களைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய சாதனை.

போட்டிகளில் கடினமான சூழ்நிலையை, எப்படி திறமையாக கையாள்கிறோம் என்பதை பொறுத்து தான் வெற்றி கிடைக்கும்.

சமீபத்தில் டுபாய், அபுதாபியில் நடந்த போட்டிகளில் நாங்கள் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

இருப்பினும், தோல்வியில் இருந்து மீண்டு வந்து வெற்றி பெற்றது அணியின் தன்னம்பிக்கையை அதிகரித்துள்ளது. இதன் மூலம் மூன்றாவது போட்டியிலும் வெற்றி பெற முயற்சிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

# யாழ். நகர உணவுச்சாலைகள் மீது அதிரடிச் சோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட உணவுச்சாலைள் மற்றும் உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள் மீது அதிரடிச் சோதனை நடவடிக்கைகளை யாழ. மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் அதிரடி சோதனை நடவடிக்கையின் போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத உணவுச்சாலைகள் எச்சரிக்கப்பட்டதுடன் குறித்த கால அவகாசத்துக்குள் சுகாதார குறைபாடுகளை நிவர்த்திக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரிகளான டாக்டர் பி. யசிதரன், டாக்டர் திருமதி தயாழினி சிவதாசன் தலைமையிலான குழுவினரே இவ் அதிரடி சோதனை நடவடிக்கையில் இறக்கியுள்ளனர். (ந)

# விஞ்ஞான பாட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விஞ்ஞான பாடத்திற்கான இலவச முன்மாதிரி கருத்தரங்கு இன்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணியில் இருந்து மாலை 3.45 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

முன்மாதிரிப் பரீட்சை வினாக்கள் கையேடுகள் இலவசமாக வழங்கப்படும்.

இதுவரை நடைபெற்ற செயலமர்வுகளில் பங்கு பற்றாத மாணவர்கள் மேற் குறிப்பிட்ட ஏதாவது ஒரு தினத்தில் பங்கு பற்றி பயனடைய முடியும். (அ-5)

# இரத்ததான முகாம்



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்திய சாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டிலும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த து. வெற்றிவேலின் அனுசரணையிலும் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியின் தலைமையில் நடைபெறும் இரத்ததானமுகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து பி.ப. 1.00 மணிவரை வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை சிகிச்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இரத்ததான முகாமுக்கு வழமையாக இரத்ததானம் செய்யும் குருதிக் கொடையாளர்களும் புதிதாக இரத்ததானம் செய்ய விரும்பும் குருதிக் கொடையாளர்களும் சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிர் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இதில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை இரத்த வங்கியினரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரும் கலந்து கொண்டு இரத்த சேகரிப்பை மேற்கொள்ளவுள்ளனர். (எ)


1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 1942 - 11 - 17

விண்ணுலகில் 2012 - 12 - 11

அமரர்

சின்னையா பாலசுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபரும், முன்னாள் புலோலி ப.நோ.கூ.ச. கிளைக்குழு உறுப்பினரும்)

முதலாமாண்டில் முத்தான நினைவுகள்
முத்தாய்ப்பாய் உத்தியோகம் பார்த்த கோலம்!
முழு நிலவாய் வட்டமிட
மூச்சுக் காற்றாய்....
எமக்குள் நீங்கள் சஞ்சரிக்கும் உணர்வு!
எத்தனை கோடி இன்பந்தந்தீர்கள் அப்பா!
எந்திழையாளை இழந்து
ஏக்கமுடன் நாவேழு ஆண்டுகளாய்
எம்முடன் தயவான தாயாய்
தளராத தந்தையாய்
தரணியில் எமை உயர வைத்த
தயாநிதியே எம் தந்தையே!
கொள்கையில் கொற்றவனாய்

மாநிலா மனதுடன்
யாதார்த்த வாதியாய் யார்க்கும்
அஞ்ஞா நெஞ்சமுடன்
அவனியில் வாழ்ந்தீர் அப்பா!
நாம் வளமுடன் வாழ
நற்காரியங்கள் பல
நலமுடனே இயற்றி
நன்னும் போதெல்லாம் உனை
நினைக்க வழி சமைத்தீர் அப்பா!
வாழியவே நீங்கள் என்றும்
சொர்க்கத்தில்
பாலசுந்தரலிங்கமாய்!

சோதிட நிலையம்,
மாய்க்கை, தம்பசிட்டி.
புலோலி மேற்கு.

உங்கள் ஆறாத பிரிவுத் துயருடன்
- பிள்ளைகள் -

(4601)

## சகல தொழில்களும் இராணு...

எமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது. அவர்களின் ஒத்துழைப்பின், உதவியின் சின்னமாகவே இந்த நவீன அரிசி ஆலை எமக்குக் கிடைத்துள்ளது.

அவர்களுக்கு ஆங்கிலத்தில் நான் சொல்ல இருக்கும் சில கருத்துக்களை இப்பொழுது தமிழில் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இன்று அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இருக்கும் மிகப் பெரிய பிணக்கு சட்ட விரோதமாக எங்கள் மக்கள் அங்கு செல்வதே. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் எங்கள் வட மாகாணம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பது. அதாவது மக்களுக்குரிய காணிகள் இராணுவத்தினரால் பலாத்காரமாக கையேற்கப்பட்டு மண்ணின் சொந்தக்காரர்கள் தமது மண்ணில் வாழவழியில்லாமல் இராணுவக்கெடுபிடிக்குள் அகப்பட்டுத்தத்தளிக்கின்றனர்.

இரண்டாவது, பலவழிகளில் தென்னாட்டில் இருந்து சிங்கள மக்களைக் கொண்டுவந்து வட மாகாணத்தில் குடியேற்றி தமிழ் தமது சொந்த இடங்களை விட்டுச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதற்கு இராணுவம் ஒத்துழைப்பு கொடுத்து வருகின்றது.

மூன்றாவது எமது மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. எமது பெண்கள் வலோத்காரப் பாலியல் பாதிப்புகளுக்கு ஆளாக்கப்படு கின்றார்கள். பொலிஸார் யாரால் இவை நடக்கின்றன என்று தெரிந்தும் நடவடிக்கையை எடுக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள்.

நான்காவது தொழில்வாய்ப்பற்ற நிலை. வறுமையின் கோட்டிற்கு கீழ் வசிக்கும் எம் மக்களுக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் இதுவரை காலமும் இருந்து வந்துள்ளோம்!

எமது வீடுகளையும் காணிகளையும் இராணுவம் எடுத்து வைத்திருக்கும்போது எமது மீனவர்களின் தொழில்களை இராணுவமும், கப்பல் படையும் செய்யும் போது, எமது வேளாண்மை நிலங்களை இராணுவத்தினர் எடுத்து பயிரிடும்போது, ஏ9 தெரு நெடுக எம்மால் செய்யக்கூடிய தேநீர்க்கடை, உணவு வியாபாரங்களை அவர்களே செய்யும்போது எமக்குத் தொழில் வாய்ப்புக்கள் எங்கிருந்து கிடைக்கப் போகின்றன?

ஆகவே வேலையில்லாமல், காணியில்லாமல், பாதுகாப்பு இல்லாமல் போகும் இடம்தெரியாமல்தான் அவுஸ்திரேலியா செல்ல முடிவு எடுக்கின்றார்கள் எம் மக்கள்.

இதனால்தான் வட மாகாணத்தில் இருந்து இராணுவத்தினரை வெளியகற்ற வேண்டும் என்று கேட்டு வருகின்றேன். இது இராணுவத்தினருக்கு எதிராக நான் எழுப்பும் குரல் அன்று. நாட்டின் அரசாங்கத்தின் அரசியல் பார்வைக்கு எதிராக நான் எழுப்பும் குரல்.

போர் முடிந்த பின்னர் இராணுவத்தை என்ன செய்வது என்று தெரியவில்லை. அரசாங்கத்திற்கு அவர்களை வட மாகாணத்தில் தரிக்க வைத்து அவர்களின் குடும்பங்களையும் அங்கு செல்ல விட்டால் வட மாகாணத்தை காலா காலத்தில் சிங்கள மயம் ஆக்கிவிடலாம் என்ற எண்ணத்தில்தான் தொடர்ந்து போரின் பின்னர் சுமார் ஐந்து வருட காலம் இராணுவத்தை இங்கு நிலை நிறுத்தி வைத்துள்ளார்கள் போல் தெரிகிறது.

இவ்வாறு நான் கூறுவதால் என்னை அழித்தால் என்னவென்று இராணுவத்தினர் எண்ணக்கூடும். என்னை அழிப்பதால் நான் தியாகிப் பட்டம் பெற்று விடுவேன். ஒரு மகாத்மா ஆகிவிடுவேன். ஆனால் உண்மை எங்கும் போகாது இங்குதான் இருக்கும் ஆகவே அழிப்பு எண்ணங்களைக் களைந்து ஆக்க எண்ணங்களில் ஈடுபடுவோமாக என்றார். (ஏ)

## சிறிதரன்...

மன்ற உறுப்பினரேனும் அதனை நினைவு கூர்ந்து பேசாமை கவலைக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிதரனின் உரையை செவிமடுத்துக் கொண்டிருந்ததாகவும், எவரும் இடையூறு விளைவிக்கவில்லை எனவும் அவர் வருத்தம் வெளியிட்டுள்ளார்.

இலங்கைப் பாராளுமன்றம் ஓர் மிருகக் காட்சிச்சாலைக்கு நிகரானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிறிதரன தனது இனத்திற்காக குரல் கொடுத்துள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் அரசியல் சாசனத்திற்கு முரணாக செயற்பட்ட சிறிதரனை கைது செய்ய சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஞானசார தேரர கோரியுள்ளார். (எ-11)

## நல்லிணக்க செயற்...

துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுமென்றே மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தி, அரசாங்கத்தையும் படையினரையும் ஆத்திரமடையச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு முன்னதாக வடக்கில் குழப்பங்களை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது.

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தரவுகளை கூட்டமைப்பு ஏற்றுச் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இறுதிக்கட்ட யுத்தம் வரையிலும பிரபாகரனின் ஈழக் கோரிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்து வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

அல்கய்தா இயக்கத்தலைவர் ஒசாமா பின் லேடனுக்கு அஞ்சலி செலுத்த அமெரிக்கா அனுமதிக்குமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என பாதுகாப்புச் செயலாளர தெரிவித்துள்ளார். (எ-11)


**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
**GUNAA BEST PC** 52,Hospital Road,Jaffna.

**வேலையாட்கள் தேவை**

கொத்து ரொட்டி, பிறைட் ரைஸ், டெவில் சிக்கன் வகையான உணவுகளைத் தயாரிப்பதில் முன் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்தவர் தேவை. அத்துடன் யாழ். உணவு வகைகளை சுவைபட தயாரிப்பதில் வல்லுநர்களும் மற்றும் உணவகத்தை துப்புரவு (Cleaning) செய்யக் கூடியவர்களும் உடன் தேவை.
**தொடர்பு : 0766038561**
Rajeethkumar (4596)


## அரசியல...

அதிகாரங்களையும் மாகாணங்களுக்கு வழங்காது இலங்கை, சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுடன் உறவுகளை பலப்படுத்திக் கொள்ளக் கூடும் எனவும் இந்திய அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-11)


**மணல் விற்பனைக்கு**

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.
4½ ரக்டர் 17500
**தொடர்புகளுக்கு:- தீபன்**
**077 676 6499, 077 759 0792**
(சி-5595)


## எல்லாளனின் யுத்...

வுக்கு எதிராக விசாரணை நடத்துவதற்கு முனனர் பரித்தானிய பிரதமர் இலங்கையில் நடைபெற்ற எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம் பற்றி விசாரணை நடத்த வேண்டும்.

யுத்தம் ஒன்று நடைபெறும் போது எதிர் தரப்பில் இருந்து தாக்குதல் நடத்துவார்கள். மறுதரப்பில் இருந்தும் தாக்குதல் நடத்துவார்கள்.

யுத்தம் செய்யும் போது எந்த சட்டத்தை கடைப்பிடிப்பது? முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆடசிக் காலத்தில் அந்த கட்சியினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரை தாக்கும் போது நாங்களும் சென்று அவர்களை தாக்கினோம்.

இதுபோலவே விடுதலைப் புலிகள் தாக்கிய போது எமது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். அப்படி தாக்குதல் நடத்தியே யுத்தத்தை வென்றோம்.

ஜனாதிபதி உட்பட இராணுவத்தினர் அனைவரும் இணைந்து இந்த போரை வெற்றி கொண்டோம். எதற்காக இதற்கான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். (எ-11)

## மாநகர சபை...

பெற்றன. இந்நிலையில் இதனை சபையின் எதிர்க்கட்சியினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாநகர சபையின் ஆளும் கட்சியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் எதிர்க் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இருக்கின்ற நிலையில் சபையின் ஆளும் கட்சிகுள் தற்போது ஏற்பட்டிருக்கின்ற உள் முரண்பாடுகளினால் சபையில் ஆளும் கட்சிக்குள்ளேயே மோதல்கள் ஆரம்பித்துள்ளன.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற போதே ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் மேற்கண்டவாறு வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

மாநகர சபையின் செயலாளரினால் கடந்த மாதக் கூட்ட அறிக்கைகள் வாசிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து சபையின் உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட அறிக்கைகள் மற்றும் பிரேரணைகளும் சபைக்கு கொண்டுவரப்பட்டது.

இதன் போது சபையின் ஆளும் கட்சியின் உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட அறிக்கைகள் மற்றும் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை சபையின் ஆளும் கட்சியின் சக உறுப்பினர்களே எதிரான கருத்துக்களைத் தெரிவித்து கடுமையான எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். (எ-6)

## இரண்டா...

நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 154 வாக்குகளும் எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, ஜனநாயகக் கட்சி என்பன எதிராக வாக்களித்தன. (எ-11)


**பதவி வெற்றிடங்கள்**

- **SUPERVISOR** (மேற்பார்வையாளர்)
- **ASS. MANAGER** (துணை முகாமையாளர்)
- **MANAGER** (முகாமையாளர்)
- **STORE KEEPERS** (களஞ்சியப்படுத்துனர்)
- **ACCOUNTS**

இதோ எமது Canadian Companyயில் அடிப்படைத் தகைமையான O/L உடன் எம்முடன் இணைந்து நிரந்தரமாகப் பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம்.
பல்வேறுபட்ட பதவிகளுக்கு துடிப்பும் ஆர்வமும், வேலை தேடுபவராகவும் நீங்கள் இருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்.
அடிப்படைச் சம்பளம் 12,000/= - 15,000/= பின் 50,000/=
தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
0776219536, 0771906728
(4618) வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்புக்களும் வழங்கப்படும்



**திருமதி புஷ்பவதி வரதராஜா**

**அவர்களின் சேவை நலன் பாராட்டு**



எமது பாடசாலையில் ஆசிரியையாய் பகுதித்தலைவராய் பணியாற்றும் காலமதில் அன்பின் உறைவிடமாய் அறிவின் பொக்கிஷமாய் பொறுமையின் சின்னமாய் அமைதியே வடிவமாய் அளப்பரிய சேவையாற்றி பணியிலிருந்து ஓய்வு பெறும் தங்களைப் பாராட்டுவதுடன் பல்லாண்டு நீடூழி இன்புற்று வாழ நடுத்தோட்ட விநாயகர் நல்லாசி புரிய வேண்டுமென வேண்டுகின்றோம்.

**சேவைக்கால விபரம்**

யா/புங்குடுதீவு இறுப்பிட்டி அ.மி.த.க. பாடசாலை 10.11.1988 - 31.12.1992
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை 01.01.1993 - 31.12.1994
யா/நாவற்குழி மகா வித்தியாலயம் 01.01.1995 - 31.08.1995
யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம் 01.09.1995 - 20.04.1998
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 21.04.1998 - 30.11.2013

அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
(C-5605)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.